குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 24]    குரோதிஆண்டு தைத்திங்கள் 10—2—65    [இ



தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர்

## அருள்வாக்கு

என்னை அறிவென்றான்
என் அறிவில் ஆனந்தந்
தன்னைச் சிவமென்றான்
சந்ததமும்-என்னை உன்னைப்
பாரா மறைத்ததுவே
பாசமென்றான் இம்மூன்றும்
ஆராய்ந்தவர்முத்தராம். (26)

ஆசிரியர் :-

வித்துவான்,
**சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்**

துணையாசிரியர் :-

வித்துவான்,
சி. அருணைவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

**தருமையாதீனத் திங்கள் இதழ்**

மலர் 24 | 10-2-65 | இதழ் 3.

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | மூர்த்தி தலம் தீர்த்தம் ... | 137 |
| 2 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை ... | 141 |
| 3 | தோத்திரம் ... | 147 |
| 4 | முருகன் துதி ... | 148 |
| 5 | தமிழகத் திருக்கோயில்கள் | 150 |
| 6 | தொல்காப்பியச்சொல்லதிகார விளக்கக் கட்டுரைகள் . | 153 |
| 7 | குறிஞ்சிக் கடவுள் ... | 157 |
| 8 | சஹஸ்ராகமம் ... | 161 |
| 9 | தமிழ் கூறு நல்லுலகம் ... | 165 |
| 10 | சித்தாந்த வினாவிடை ... | 169 |
| 11 | அப்பய்ய தீக்ஷிதரும் சிவபரத்துவமும் ... | 173 |
| 12 | சிவாகமத் தெளிவு ... | 178 |
| 13 | மகோதயபுண்ணியகாலம் | 183 |
| 14 | செய்திகள் .. | 185 |
| 15 | எதிர்காலம் ... | 190 |

வேளூர், ஸ்ரீ வைத்தியநாதசுவாமி
தேவஸ்தானத்தில் எழுந்தருளி
அருள்வழங்கும்
ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 24 ] குரோதி - தை - 10—2—65 [ இதழ் 3

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## மூர்த்தி தலம் தீர்த்தம்

உடல்நலத்தினும் சிறந்தது உயிர்நலமே என்று உணர்ந்து, ஆன்ம லாபத்தை நாடுவது நம்நாடு. அங்ஙனம் நாடி, அந்த ஆன்ம லாபத்தைப் பேற்று, அதனை ஏனையோர்க்கும் உணர்த்திச் சென்ற ஆன்றோரும் பலர் நம் நாட்டில் வாழ்ந்தனர் ; வாழ்கின்றனர்.

உடலை ஓம்ப விரும்புவோர் அதற்குரிய எத்துணையோ வழிவகைகளில் முயல்வதுபோல, உயிரை ஓம்ப விரும்புவோரும் அதன்பொருட்டு எத்துணையோ வகையில் முயல்வர். தமக்குக் கிடைத்தவற்றைத் தாமே தமியராய் உண்ணுது, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புவாராய், வறியார்க்கு

ஈதல், அற்றார் அழிபசி தீர்த்தல் முதலியவற்றைச் செய் தலும், தம்உயிர் நீப்பினும் தாம் பிறிதின் உயிர் நீக்காது, பிறிதின் நோயைத் தம் நோய்போல் போற்றி ஒழுகுதலும் போன்ற அறச்செயல்களும் உயிர்நலம் விரும்புவோர்செய்யும் செயல்களேயாம்.

உயிர்நலத்தை அறநெறியினும் நிறைவுற அளிப்பது இறைபணியாகிய மெய்ந்நெறிச் செயல்களே. அறம், பாவத் திற்கு எதிரானது. பாவம், உயிரைத் தீய பிறப்பிற் செலுத் தித் துன்பத்தை உறுவிப்பது. எனவே, அறம் அதனை மாற்றி, நல்ல பிறப்பிற் செலுத்தி இன்பத்தை உறுவிக்கும்.

தீய பிறப்பாயினும், நல்ல பிறப்பாயினும் பிறப்பு, துன்பம் தருவதேயாகும். பிறப்பை அறுப்பது, இறைவன் திருப்பணியே. அதனால், அறத்தைமட்டும் செய்வோர் உயிர்நலத்தை ஓரளவே பெற்றவராவர்; இறைபணியில் நிற்போரே உயிர்நலத்தை முழுவதும் பெறுவர்.

இதனால், அறம் விலக்கப்படுகின்றது என்பது பொரு ளன்று; அறத்திற்கும் மேற்பட்டது இறைவன் திருப்பணி என்பதும், உயிர்நலத்தின் சிறப்பை உணர்ந்து அறநெறியிற் சென்றோர் அதற்குமேலும் இறைநெறியிற் செல்லுதல் வேண்டும் என்பதுமே பொருளாகும். 'இறைபணியும் எங்கட்கு வேண்டா; பிறவி அறுதலும் வேண்டா; அறமே போதும்' என்பார் உளராயின், அவரது கூற்று, 'அறம் எங்கட்கு வேண்டா; நல்ல பிறவியும் வேண்டா; உடலை வளர்த்து, உயிர் வாழ்ந்தாற்போதும்' என்பவரது கூற்றோடு ஓரளவு ஒப்புமையுடையதேயாம். ஆதலின், இறைபணியில் நின்று, இணையிலா இன்பம் எய்திய எழி லாளரே நம் நாட்டில் எண்ணிறந்தவர்.

எல்லா நாடுகளிலும் அறநெறியே சிறந்து விளங்குவது. நம்நாட்டில் இறைநெறியே ஏற்றம் பெற்று இலங்குவது, எங்கும் புண்ணிய தீர்த்தங்கள்; தலங்கள், எப்பக்கம் திரும் பினாலும் கோயில்கள்; முனிவர்களும் இருடிகளும் வாழ்ந்த தவச்சூழல்கள்; தலையாய நூல்களாகிய வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் ஆகிய எல்லாவற்றிலும் இறைவழி

பாட்டுப் பாடல்கள் ; வழிபாட்டு முறைகள் ; அவற்றின்படி எங்கும் நடைபெறுவன அன்றாட வழிபாடுகள் ; சிறப்பு நாள் விழாக்கள் ; யாவரிடத்தும் தீர்த்த யாத்திரை ; தல யாத்திரை. இவைகளே நம்நாட்டின் சிறப்புச்செல்வங்கள்.

" இறைவன் கழல்ஏத்தும் இன்பம் இன்பமே "
" செல்வன் கழல்ஏத்தும் செல்வம் செல்வமே "

என்னும் குறிக்கோளை உடையது இந்நாடு. இதனால், இறை பணியில் நின்று, பிறவிப் பெருங்கடலை நீந்தி, எல்லையில் இன்பக் கரையை அடைந்திருத்தலாகிய ஆன்ம லாபத் தையே உயர்ந்தோர் அனைவரும் நாடிச் செல்லுதலை அறிய லாம்.

ஆன்ம லாபமாகிய உயர்நிலையை அடைவதற்குப் பல படிகள் உள்ளன. அவைகளில் முதலாவது, தீர்த்த யாத் திரை அல்லது தல யாத்திரை செய்தல். இவ் யாத்திரையின் முதற் குறிக்கோள், ஆங்காங்கு உள்ள மூர்த்திகளை வழி படுவதேயாகும். இருத்தற்குத் தலம் இன்றியமையாதது. தலத்தில் சென்று மூர்த்தியை வழிபடுவதற்குத் தீர்த்தம் இன்றியமையாததாகின்றது. ஆகவே, முதலில் தீர்த்தத் தில் முழுகித் தூய்மைபெற்று, பின்பு தூய இடமாகிய கோயிலிற் சென்று, அருள் வடிவாகிய மூர்த்தியை வழிபட வேண்டும். இவ்வழிபாட்டினால் இறையன்பு மிகுந்து, உலகப் பற்றுக் குறையும். 'அதன்பின் இறைவனை அடைதல் எவ்வாறு' என்னும் அவா உண்டாகும். அந்த அவா உண் டானவர்கட்கு, இறைவனே குருவாகி வந்து, தன்னை அடை யும் வழியை உணர்த்துவான், இது பற்றியே,

" மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே "

என்று அருளிச்செய்தார் தாயுமான அடிகள். " மூர்த்தி, தலம், தீர்த்தம் ' என்றது மேலிருந்து கீழேவரும் முறையிற் கூறியது. ஆகவே, ' முறையாய்த் தொடங்குதல் ' என்பது கீழிருந்து மேலே செல்லும் முறையில், ' தீர்த்தம், தலம், மூர்த்தி ' என்று கொண்டு செல்லுதல் வேண்டும். 'தலம்' என்பது, பொதுவாக ஒரு நகரத்தை, அல்லது ஓர் ஊரைக்

குறிப்பினும், சிறப்பாக அங்குள்ள திருக்கோயிலேயே குறிப்ப தாகும். ஆகவே, முதலில் செய்யுத்தக்கது தீர்த்தங்களிற் சென்று முழுகுதலேயாகும்.

நம்மவர்கட்குத் தீர்த்த யாத்திரையில் உள்ள பெரு விருப்பத்திற்கு, அண்மையில் வந்த மகோதய புண்ணிய காலத்தில் வேதாரணியம், கோடிக்கரை, காவிரிப்பூம்பட்டி னம், தனுக்கோடி முதலிய இடங்களில் மக்கள் திரள் திரளாகச் சென்று கடலிலும், மற்றைய தீர்த்தங்களிலும் முழுகினமையும், அங்கு நிகழ்ந்த அன்னம்பாலிப்பு முதலிய அறச்செயல்களுமே சிறந்த சான்ருகும். கடலாடுவதிலும், அவ்வமையம் தான தருமங்கள் செய்வதிலும் நம்மவருக் குள்ள ஆர்வத்தையும், ஊக்கத்தையும், அந்நிகழ்ச்சிகளை நேரில் சென்று கண்டவரே அறிவர். மக்கட் கூட்டத்தின் ஆர்வத்திற்கு ஏற்ப அரசியலாரும், தனிப்பட்ட பலரும் அமைத்துத்தந்த இடவசதி, பாதுகாப்பு, போக்குவரவுச் சாதனம் முதலிய பேருதவிகளும், சைவ ஆதீனங்கள் செய்த அன்னதானங்களும் ஆத்திகர் அனைவராலும் போற்றப்பெற்றன.

சென்ற தை அமாவாசை தீர்த்தச் சிறப்பைக்கொண்டு நின்றதுபோல, அடுத்துவரும் மாசி அமாவாசைக்கு முன் னுள் மூர்த்திச் சிறப்பைக் கொண்டு நிற்பதாகும். மூர்த்தங் களிற் சிறப்புடையது இலிங்க மூர்த்தமே. இது சோதி வடி வானது ; அருவமும் அன்றி, உருவமும் அன்றி அருவுருவ மாய் விளங்குவது ; எல்லாப் பொருட்கும் மூலமானது.

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் பூண்டார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்"

என்பது சேக்கிழார் வாக்கு. இறைவன் இலிங்க சொரூப மாய் எழுந்த காலமே சிவராத்திரி புண்ணிய காலமாகும். இந்நாளில் உண்ணு நோன்பை மேற்கொண்டு, இரவு நான்கு சாமத்திலும் உறக்கம் இன்றிச் சிவலிங்கப் பெருமானுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் செய்தலும், செய்வித்தலும், சிவதரிசனம் செய்தலும் இன்றியமையாதனவாம். எனவே, அந்நாளில் அனைவரும் அத்தகைய மூர்த்தி வழிபாட்டில் அனைவரும் ஈடுபட்டு, அவன் அருளைப் பெறுவோமாக.

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

## குருவருள்

சித்தி தருநாதன் தென்கமலை வாழ்நாதன்
பத்தி தருநாதன் பரநாதன் — முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாசன் உண்மை
தருநாதன் நங்குருநா தன்.

— குருஞானசம்பந்தர்.

உயிர்கள் அடையும் இன்பம் இரண்டு. அவை, 'உலகின்பம், வீட்டின்பம்' என்பன. உலகின்பம், சிறிது; நிலையாதது; துன்பத்தோடு கலந்தது. வீட்டின்பம், பெரிது; நிலைத்தது; துன்பத்தோடு கலவாதது. ஆகவே, வீட்டின்பத்தைப் பெற்ற உயிரே, துன்பத்தினின்றும் முற்றிலும் நீங்கியதாகும்.

உலகின்பத்தைத் தருவன பொய்ப் பொருள்கள்; அஃதாவது, தோன்றி மறையும் பொருள்கள்; வீட்டின்பத்தைத் தருவது மெய்ப்பொருள்; அஃதாவது, தோற்றக்கேடுகள் இன்றி, எக்காலத்தும் ஒரே நிலையாய் நிற்கும் பொருள். பொய்ப் பொருளை எத்துணையோ வகைகளில் எளிதில் அடையலாம். ஆனால், மெய்ப் பொருளை அவ்வாறின்றி, ஞானம் ஒன்றினாலேயே அடைய முடியும். ஆதலின், துன்பத்தினின்றும் முற்ற நீங்கி, நிலைத்த பேரின்பத்தைப் பெற விரும்புவோர், ஞானத்தைப் பெறவே விரும்புதல் வேண்டும்.

நிலையற்றனவாகிய உலகப் பொருள்களைப் பெறுதற்குரிய முறைகளை யார் வழியாகவேனும் அறிந்துகொள்ளலாம்; நிலையுடைய மெய்ப் பொருளைப் பெறுதற்குரிய வழியாகிய ஞானத்தை ஞானசாரியன் வழியாக அன்றிப் பிறர் வழியாக அறிதல் இயலாது. ஆகவே, ஞானசாரியனாகிய சற்குருவை அடையப் பெற்றோரே, மக்கட் பிறப்பின் பயனை அடைந்தவர் ஆகின்றனர்.

ஞானசாரியராலே ஞானம் உண்டாவது, பக்குவம் வாய்ந்த மாணாக்கர்கட்கேயாம். அவ்வாறே பக்குவம் வாய்ந்த மாணாக்கர்க்கு ஞானம் உண்டாவதும் ஞானசாரியராலேயாம். இது, எதுபோல்வது எனில், சூரியனால் நெருப்பு உண்டாவது சூரிய காந்தக் கல்லிலேயும், சூரியகாந்தக் கல்லில் நெருப்பு உண்டாவது சூரியனாலேயும் ஆவதுபோல்வதாம். இதனை,

" சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தமும் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே "

( திருமந்திரம் - 117. )

" சூரியகாந் தக்கல்வி னிடத்தே செய்ய
சுடர்தோன்றி யிடச்சோதி தோன்று மாபோல்,
ஆரியனும் ஆசான்வந் தருளால் தோன்ற,
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்; தோன்றத்
தூரியனும் சிவம்தோன்றும்; தானும் தோன்றும்;
தொல்லுலகம் எல்லாம்தன் னுள்ளே தோன்றும்;
நேரியனாய்ப் பரியனுமாய் உயிர்க்குயிராய் எங்கும்
நின்றநிலை எல்லாமுன் நிகழ்ந்து தோன்றும் "

( சிவஞான சித்தி. சூ. 8 - 28. )

" ஞானம் இவனொழிய நண்ணியிடும் நற்கல்அனல்
பானு ஒழியப் படின் "

( திருவருட் பயன். 50. )

என்னும் அருள் வாக்குக்கள் நன்கு விளக்குகின்றன.

'பக்குவம்' என்பது, உலக இன்பத்தில் வெறுப்பும், வீட்டின்பத்தில் விருப்பமும் தோன்றுவதாம். இவை சிறிது சிறிதாகத் தோன்றி வளர்ந்து மூதிரும். மிகவும் முதிர்ந்த நிலை. 'அதிதீவிர பக்குவம்' எனப்படும். 'சத்திநிபாதம்' என்று சொல்லப்படுவதும், பக்குவநிலையே. அதனை, 'மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம்' என நான்காகக் கூறுவர். 'தீவிரதரம்' என்பதும், 'அதிதீவிரம்' என்பதும் ஒன்றே. ஞானம் ஒன்றே எனினும், அது பயன்படுவது, பக்குவத்திற்கு ஏற்பவேயாகும்.

அஃதாவது ஆசாரியர் உபதேசிக்கும் உபதேச மொழியே ஞானம். அதனைக் கேட்ட பின்பு அதன் பொருளைச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடுதலே ஞானத்தின் பயன். ஆகவே, அவை மந்ததர பக்குவம் உடைய மாணுக்கர்க்கு மிகவும் மெத்தென நிகழும். மந்த பக்குவம் உடைய மாணுர்க்கு அவை சிறிது வேகமாய் நிகழும். தீவிர பக்குவம் உடைய மாணுக்கர்க்கு அவைகள் வேகமாகவே நிகழும். அதிதீவிர பக்குவம் உடையவர்க்கு அவை அதிவேகமாய் நிகழ்ந்து, உடனே நிட்டை நிலை கைகூடிவிடும். மேலும், அதிதீவிர பக்குவம் உடையவர்கட்கு, நிட்டைக்குப்பின் உலகம் தோன்றுவது இல்லை. ஏனையோருக்கு நிட்டை கூடினுலும், மீள மீள உலக வாசனை தாக்குவது உண்டு. இதுவே, 'வாசனு மலம்' எனப்படுவது. அதிதீவிர பக்குவத்திற்கு எங்கள் இரண்டாவது குருமகாசந்நிதானமாகிய ஸ்ரீ ஆனந்த பரவச தேசிகரே போதிய சான்ருக விளங்குகின்ருர்.

எங்கள் ஆதி பரமாசாரிய மூர்த்திகளாகிய ஸ்ரீ குருஞான சம்பந்தர், தமக்குப் பின்பு தமது ஞானபீடத்தில் அமர்ந்து பலருக்கு ஞானுேபதேசம் செய்து ஞான ஒளியைப் பரப்புதற்பொருட்டு, ஸ்ரீ ஆனந்த பரவச தேசிகருக்குத் தமது ஞானுேபதேசத்தைச் செய்து, தாம் சமாதியில் இறங்கினுர். ஆனுல், ஸ்ரீ ஆனந்த பரவசரோ அவருக்கு முன்னரே தாம் கேட்ட ஞானுேபதேசத்தின் பயனுகிய நிட்டை கைவரப் பெற்றுச் சிவானுபூதியில் அழுந்தி உலகை மறந்து சமாதி நிலை பெற்ருர். அதனைக் கண்ட அடியவர் திருக்கூட்டத்தினர், தம் ஆதி பரமாசாரியரை வேண்டிக்கொள்ள, அவர் மீண்டும் வந்து ஸ்ரீ சச்சிதானந்த தேசிகருக்கு உபதேசம் செய்து நிட்டானுபூதிநிலையை வருவித்துப் பீடத்தில் அமர்த்திச் சமாதியை அடைந்தார். தீவிரதர பக்குவிகளது நிலை இத்தகையதேயாகும்.

இத்தகைய பக்குவம் வாய்ந்த மாணுக்கர்கட்குக் குருவை யன்றி வேறொரு பொருளும் இராது. குருவே தாய்; குருவே தந்தை; குருவே இறைவன்; குருவே எல்லாம். குரு வாக்கே வேதவாக்கு.

" குருவே சிவம்எனக் கூறினன் நந்தி
குருவே சிவம்என் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரைஉணர் வற்றதோர் கோவே "

" தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே "

என்ற திருமந்திரம், பக்குவம் உள்ள மாணுக்கர்க்கே மெய்ம் மொழியாய்ப் பயன் தரும். இவ்வாறு, 'குருவே சிவம்' என நினைத்துப் பணிபுரியும் குருபத்தி யுடையவர்கட்கே குருவருள் பல வகையாலும் கிடைக்கும்.

பலவகையாவன, குருவினது அருட் பார்வை, அருள் நினைவு, அருட் பரிசம் முதலியன. மீனின் பார்வை அதன் முட்டையில் உள்ள கருவை மீனுக்குதல்போல, குருவினது அருட் பார்வை மாணுக்கனைச் சிவமாக்கும். ஆமையினது நினைவு அதன் முட்டை யிலுள்ள கருவை ஆமையாக்குதல் போல, குருவினது நினைவு மாணுக்கனைச் சிவமாக்கும். கோழியினது பரிசம் அதன் முட்டை யில் உள்ள கருவைக் கோழியாக்குதல் போல, குருவினது அருட் பரிசம் மாணுக்கனைச் சிவமாக்கும். தாயின் செய்கையால் முட்டையில் உள்ள கரு குஞ்சாக மாறுவது, அதற்குரிய பக்கு வத்திலேதான். அதுபோலவே, குருவினது அருளால் மாணுக்கன் சிவமாவதும், 'குருவே சிவம்' எனக் கருதி வழிபடும் பக்குவம் வந்த பொழுதேயாம். இதனையே, அருணந்தி சிவாசாரியார் தமது சிவஞான சித்தியாரின் முடிவில் கூறி, அந்நூலை முடித் துள்ளார். அத் திருவிருத்தம்,

"பரம்பிரமம் இவன்என்றும் பரசிவன்றான் என்றும்
பரஞானம் இவன்என்றும் பராபரன்றான் என்றும்
அரன்தருஞ்சீர் நிலைஎல்லாம் இவனே என்றும்
அருட்குருவை வழிபடவே அவன்இவன்றான் ஆயே
இரங்கியவா ரணம்யாமை மீன்அண்டம் சினையை
இயல்பினெடும் பரிசித்தும் நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதாம் ஆக்குமா போல்சிவமே ஆக்கும்
பரிசித்தும் சிந்தித்தும் பார்த்துந் தானே"

என்பதாம்.

தீவிரதர பக்குவம் உடையவர்களைச் சிவமாகவே செய்யும் குருவருள் அதனைமட்டுந்தான் செய்யும் என்பது இல்லை. அவர வரது பக்குவத்திற்கு ஏற்ப எல்லாப் பயன்களையும் தரும். அவைகள் அனைத்தையும், 'சித்தி' என்ற ஒரு சொல்லால் சொல்லலாம். சித்தி என்பன யாவும், உலகப் பயனைத் தருவ னவே. இனி, வீட்டின்பத்திற்கு பக்தி இன்றியமையாதது. அதனையும் அவரவரது பக்குவநிலைக்கு ஏற்பக் குருவருள் தருவ தாகும். ஆகவே, சித்தி, பத்தி, முத்தி அனைத்தும் குருவருள் பெற்றவர்க்கு எளிதில் கிடைப்பனவாகும். இதனை எங்கள் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தமது சிவபோக சார நூலில் முதற்கண் எடுத்து அருளிச்செய்த திருவெண்பாவே, தொடக்கத்தில் கொடுக்கப்பட்டது.

எங்கள் ஸ்ரீ குருஞான சம்பந்த மூர்த்திகளும் அதிதீவிர சத்திநிபாதம் உடையவராய்த் தமது குருவாகிய கமலை ஞானப் பிரகாச தேசிகரைச் சிவம் எனவே கண்டு, அவரது வாக்கைச் சிவவாக்காகவே தலைமேற் கொண்டு நடந்தமை, அவர் ஒரு முறை தாமே தம் குருமூர்த்திக்குக் கைவிளக்கு எடுத்துச்சென்ற பொழுது, குருமூர்த்திகள், தம் திருமடத்து வாசலில், 'நிற்க' என்று சொல்லிச் சென்றபின், பொழுது விடியும் வரையில் மழை யையும் பொருட்படுத்தாது நின்றிருந்த அருஞ் செயலால் விளங்கும்.

'பெற்றவட்கே தெரியும் அந்தப் பிள்ளையின்தன் வருத்தம் - பெருமலடி அறிவாளோ' என்றபடி குருவருளின் பெருமை, அதனைப் பெற்ற பக்குவிகளுக்கே விளங்குவதாம். அதனாலேயே,

தொடக்கத்தில் உள்ள வெண்பாவினுல் எங்கள் குருஞான சம்பந்தரும், மற்றும் அருணந்தி சிவாசாரியர் போன்ற பெரு மக்களும் தங்கள் குருமூர்த்திகளை வாயாரப் புகழ்ந்து வாழ்த்தி யுள்ளனர்.

அகத்தியர் தேவாரத் திரட்டிலும், 'தேவாரம் நுதலிய பொருள் எட்டு' என்று கூறுவனவற்றில் முதலாவது, 'குரு வருள்' என்றே சொல்லப்பட்டிருத்தலைக் காணலாம்.

"குருவருளும் வெண்ணீ றெழுத்தஞ்சும் கோயில்
அருளுருவும் என் தலைமேல் ஆக்கும் — திருவடியும்
சிட்டாய அர்ச்சனையும் தொண்டும் சிவாலயர்க்கென்
றிட்டார் அகத்தியனுர் எட்டு."

"தோடு கூற்றுப் பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேரரு ளாகும்"

என்னும் குறிப்புக்கள் அதனை நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. எனவே, சித்தி, பத்தி, முத்தி ஆகிய எல்லா நன்மைகட்கும் குருவருளே முதன்மையானதாகும். ஆதலின், மக்கள் அனைவரும் குருவருளின் பெருமையை உணர்ந்து சற்குருவை அடைந்து நலம் பெறுவார்களாக.


"ஞானசம்பந்தம்"

**கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் இதழ்**

**திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமய உண்மைப்பொருள் முதலியவற்றைக் குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந் துணையானது. கையொப்பத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.**

**ஆண்டுக் கையொப்பம்**

உள்நாடு ரூ. 2—25 வெளிநாடு ரூ. 3—00

**செயலாளர்,**
**"ஞானசம்பந்தம்" காரியாலயம்,**
**தருமையாதீனம், மாயூரம் அஞ்சல்,**
**தஞ்சை மாவட்டம்.**

# ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலெட்சுமி துர்க்காதேவி தோத்திரம்

## திரு. கே. சுப்பிரமணியம்

### ஆசிரிய விருத்தம்

இரவிரத மெழுபரிக ளுலவுபல திசைவிரைவி
லேகிட வியர்த்தல் கண்டே
ஏதினியு மேகலரி தாகவுள வாமென்ன
ஈண்டுசிறி துற்று நீவிர்
ஏகலினி தாமெனவ மைத்திடுத லொத்தசையு
மின்கதலி கமுகி னிலைகள்
இனமோங்கு வளர்சோலை யணிதங்கு தருமபுர
மினிதோங்கி அருள்சு ரக்கத்

தரளமுள நவமணிக ளொளிபரவு மகுடமணி
சாம்பவி மனோன் மணியெனுஞ்
சங்கரி பராபரி விசாலாட்சி காமாட்சி
சாசுவத ரூபநி லையில்
சர்வாண்ட புவனங்க ளின்றரு ளளித்துதவு
தாயென விளங்கி மறைகள்
சாற்றுபல சொற்களி னுயிர்க்குளுயி ராயிலகு
சாமளை மகேசுவ ரிசீர்க்

கரகமல நளினவிழி மதிவதன திலகநிறை
கருணையுறு வடிவி னெழிலார்
காட்சிபெறு பொருளரசி யெனநவிலு முரிமையுள
கனகவதி திருமங் கையைக்
கனதவ மியற்றுகயி லாயகுரு மணியவர்கள்
கண்டொன்று சேர்த்து நிதமும்
கருதிபணி விடைபுரி யனுளிலுமை யுந்தோன்றி
கழறினளொ ளுமு னுளில்

அரனயனொ டரிசகல விபுதருட னிகல்வலிய
அசுரகுல மகிட சிரனை
அங்கங் குலைத்தவனை வீழ்த்திய சொரூபமுள
அணிபெய ரிணைத் தழைத்தா
லவனிமிசை சுவணநிதி புயவலிமை யொடுகலைக
ளமையுமெனு மன்னை யான
அட்டா தசப்புய மகாலட்சு மித்துர்க்கை
அம்புய பதம்ப ணிவமே.

# முருகன் துதி

திரு. N. வேங்கடேசன்

### நேரிசை வெண்பா

ஓரானை நன்முகத்தான் ஒப்பிலாத் தம்பியாய்க்
கூரான வேல்கொண்டே கோதில்லா — ஊரான
நற்பழனி நன்மலையில் நாதனென நின்றுள்ளான்
பொற்கழலைப் போற்றிப் புகல்.

### கொச்சகக் கலிப்பா

வாராத கலையெலாம் வையமதி லிணைந்திடவே
சீராகச் சேர்த்திடும் சிவன்மைந்தன் குகன்றன்னை
ஆரா வமுதெனவே ஆராய்ந் தறிந்துநிதம்
தீராத தீவினையைத் தீர்த்தியென நாடுவமே.

### கட்டளைக் கலித்துறை

அன்பே உருவாம் அடியா ரடியை யணுகிநிதம்
என்பே உருகிட எண்ணிடும் ஏழை எளியமனம்
துன்பே கொளாது துணிவோ டிருக்க மயிலவனின்
இன்பே இணைய இதயத்தி லேமகிழ் வெய்துவமே.

### நேரிசை வெண்பா

தேராதார் தேற்றமுறத் தேர்ந்த கலையமுதாய்
ஓராதார் உள்ளத்தின் உள்விளக்காம் — சீரான
ஏரார்ந்த வேலனையே என்றென்றும் எண்ணிநீ
பாராத பாரதையே பார்.

### அறுசீர் விருத்தம்

விஞ்சையர் வியந்து கூறும் விற்பன ஞான வித்தை
அஞ்சுக மாம்தெய் வானை அருமைசேர் மணாள னாக
மஞ்சுதோய் குன்று தோறும் மகிழ்வொடு நின்று ளானை
அஞ்சலி செய்தே நாளும் அரியதை நாம டைவாம்.

### கட்டளைக் கலித்துறை

ஊழிலே என்ன உலகில் உவப்புடன் நின்றவரின்
ஊழினை வெல்ல உகந்த உறுதுணை வேலனையே
வாழிநீ டூழியும் வாழ்த்தி வளமெலாம் ஓங்கிட நாம்
ஆழியைப் போன்ற அகத்தை யடைய அடைகுவமே.

## விசேஷ நாட்கள்

### குரோதி வருஷம் மாசி மாதம்

3உ ஞாயிற்றுக்கிழமை நடராசர் அபிஷேகம்

5உ செவ்வாய்க்கிழமை மாசி மகம்

8உ வெள்ளிக்கிழமை எறிபத்த நாயனார் திருநக்ஷத்திரம்

15உ வெள்ளிக்கிழமை காரிநாயனார் திருநக்ஷத்திரம்

16உ சனிக்கிழமை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிஷேகம் கொண்டருளியநாள்

18உ திங்கட்கிழமை மகா சிவராத்திரி

19உ செவ்வாய்க்கிழமை கிருஷ்ணாங்காரக சதுர்த்தசி

19, 20, 21உ வேளூரில் சூரியபூசை

20உ புதன்கிழமை கோச்செங்கட் சோழ நாயனார் திருநக்ஷத்திரம்

25உ திங்கட்கிழமை பங்குனி உத்சவ ஆரம்பம்

26உ செவ்வாய்க்கிழமை ஃவளூர்க்கிருத்திகை

# தமிழகத் திருக்கோயில்கள்

## திரு. கு. தண்டாயுதம்

இத்தமிழ் கூறும் நல்லுலகில், இறையுணர்வு இடைவிடாது இலங்கி வருதல் இயற்கையோடு இயைந்ததாக இருக்கின்றது. திக்கெட்டும் திகழ்கின்ற திருக்கோயில்களெல்லாம் கடவுளுணர்வையும் கலை வாழ்வையும் இரண்டறக் கலந்து எழுச்சியோடு எடுத்துக்காட்டவல்லன. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற ஒருமையுணர்வை இயங்கச் செய்வன; கலை வாழ்வின் நிலையான கருவூலங்களாகத் திகழ்ச்செய்வன.

இவ்வுலகில் இவ்வெழிற் கோயில்கள் எழுந்ததற்கு முன்னரும் இறையுணர்வு இருக்கத்தான் இருந்தது! ஆனால் அவ்வுணர்வு உயிரைக் குறிக்கோளாகக் கொண்டது. எழுப்பிய பின்னரே உயிரோடு ஒன்றிய கலையறிவைக் கருவாகக் கொண்டது. இத்தகைய கலைக்கோயில்கள் தமிழர்தம் வரலாற்றை வரைதற்கு வளந்தருபவை. வையத்தின் மையமாக விளங்கி, மன்பதையின் மன்றமாக நின்று நிலவியவை. தமிழர் தம் திருவாழ்வு திருக்கோயில்களிற்றான் தொடங்கிற்றென்றால் தவறில்லை. அதனாற்றான் "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என வேண்டினர் போலும்? இவ்வாறு எழுச்சியுற்ற திருக்கோயில்களின் தொன்மையினையும் தொண்டினையும் அழகினையும் அமைப்பினையும் அறிந்து ஆக்கமும் ஊக்கமும் அளிப்போமாக!

### 1. சங்கத்திற்கு முன்

மாயோன் சேயோன் முதலிய நானிலக் கடவுளரை ஒல்காப் புகழ் தொல்காப்பியர் கூறியிருக்கின்றார். அதனால் அவர்காலத்திற்கு முன்னரே இவ்வுலகில் இறையுணர்வு இலங்கி இலக்கிய இலக்கணங்களில் இடம் பெற்றிருந்தமை பெறப்படும்.

> "நுதல் விழி நாட்டத்து இறையோன் கோயிலும்
> உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்
> மேழிவலன் உயர்த்த வெள்ளை நகரமும்
> கோழிச் சேவல் கொடியோன் கோட்டமும்"

மதுரை மாநகர்க்கண் மாண்புற்றிருந்தனவென இளங்கோவடிகள் இயம்புகின்றார். ஆயினும் அத்தகைய கோயில்களும் கோட்டங்களும் மரத்தால் - மண்ணால் அமைக்கப்பட்டவை.

சிற்பங்கள் சுதையால் - மரத்தால் சமைக்கப்பட்டவை, ஓவியங்கள் சீலை, சுவர்மீது தீட்டப்பட்டவை. அற்றைய நாளிலேயே அன்னோர் கோயில்களில் ஆடலும் பாடலும் நடாத்தினர். விழாக்கள் எடுத்தனர். ஆனால் பேரின்னல் காரணமாக அக்கோயில்களெல்லாம் அழிவாற்றில் புதைந்தன. என்றாலும், இவை இடம்பெற்ற அருந்தமிழ் நூற்களையாவது பெற்றோம். இவ்வாறு சங்ககால சிந்தனை சிறிதளவே தோற்றுந் தகையது.

## 2. சங்கத்திற்குப்பின்

இந்நாட்டகத்து கி. பி. ஏழாம் நூற்றாண்டில் மாண்புற்றிருந்த மாடக்கோயில்களைப் பின்பற்றி மாபெரும் குகைக் கோயில்களும் கற்கோயில்களும் மல்லை முதலிய மாநிலங்களில் எழும்பின. பழங்கோயில்கள் புதுமைப்புனைவு பூண்டன; சிற்பங்கள் கல்லில் பிறந்ததோடன்றி பொன்னிலும் பிறந்தன. ஓவியக் கலையின் உயிரோட்டம் உயர்நிலை எய்திற்று. இசைக்கல்வியின் இயற்றிறம் இசைத் தமிழை எங்கும் பரப்பிற்று. இங்ஙனம் இன்னிசை யாலும் இசைத் தமிழாலும் எழுச்சியுற்ற கலைவாழ்வே தமிழர் தம் பண்பாட்டின் பெரும் பங்காய் பிறங்கிற்று. மொழி பெயர் தேயத்தாரால் மாண்பு பெற்றது - பெற்று வருகின்றது. எனவே தமிழ்க் கலையின் கருக்கோலமே இக்கலைக் கோயில்கள் எனக் கூறின் மிகையுரையன்று. கலைவாழ்விற்குக் கருவாய், கலைக் கொடியாய், கடிமலராய், மணங்கமழ் நிலமாய்த் தோன்றத் தொண்டாற்றிய தமிழர் திறந்தான் என்னே! காவலரும் பாவலரும் கைக்கொண்ட திருப்பணியின் பயனே - பழம் பதிகளும் பாமாலைகளும் ஆகுமெனலாம். அவைகளின் பொருட்டுப் பொன்னும் பொருளும் பூமியும் வழங்கிய வண்மையாற்றலன்றோ பாரிபோல்பவரது மறையாச் செல்வமாய் மிளிர்கின்றன. இக் கூறியவகையான் இக்கோயில்களின் வளர்ச்சிகண்டு நாம் வரலாற்றிற்கு வளந்தேடித் தரவேண்டும் என்பது விளங்குமன்றோ ?

## 3. திருக்கோயில்களின் தோற்றம

கலைக்கோயில்களைக் கட்டுதல் காவலர்களால்தான் இயலும் என்ற கருத்துரை இயல்பே. தமிழ்க்காவலர்கள் நாடெங்கும் நகரெங்கும் குடியெங்கும் குளக்கரையெங்கும் கோயில்களை எழுப்பச்செய்தனர்; நிலனும் நிதியும் நல்கினர்; அரசியல் ஆதரவு அளித்தனர். இன்ன நிகழ்ச்சிகளையே இற்றைக்கோயில் சுவர்க் கல்வெட்டுக்களிற் காண்கின்றோம்.

கற்கோயில் ஒன்றினை எழுப்ப நூறுகழஞ்சுப் பொன்னைத் தமது மக்களிடம் கொடுத்துக் கோயிலெழுப்புமாறு வேண்டினனும் இராசேந்திரன். ஆனால் ஐந்து அங்கங்களையே கட்டிய குடிகள் காசை மீத்து வைத்தனராம். உடனே அரசன் கேள்வியுற்று விசாரிக்குங்கால், குடிகள் கோயிலுக்காக வாங்கிய கடன் பொருட்டு, அழகுடைச் சிலையொன்றைச் செய்து தருவதாகக் கூறினராம். இக்குறிப்பினையும் கல்வெட்டொன்றில் காண நேர்கின்றது. இவ்வாறு மடிமையுற்ற மக்களையும் குடிமைப் பயிற்சியால் காத்த கொற்றவர்களைத்தான் அற்றைத் தமிழகம் முறை காக்கும் இறையெனப் போற்றியது போலும்! சோழ நாட்டில் கோச்சோழர் எழுப்பிய கோயில் பல. அவற்றுள் ஓரிடத்திருந்த கோபுரத்தைக் கற்களால் கட்டிய காவலனைப்பற்றியும் கல்வெட்டில் காணத் தான் நேரிடும். கீழ்ப்பாக்கம் கோயிலொன்றினை ஓட்டுக் காரையால் கல்லால் கட்டிக்காத்த காவலனையும் கல்வெட்டு கூறுமல் போகாது! இச் செயலெல்லாம் பழமை போற்றிய - புதுமை புகுத்திய புரவலனின் பணிகளன்றோ? தில்லையில் தன்னையும் பொன்னையும் நிறுத்துப் பொன்வேய்ந்த சுந்தரபாண்டியனை இனி இவ்வுலகம் எதிர்பார்க்க முடியாது. இவ்வாறு இசை வேந்தர் எழுப்பிய பெருங்கோயில்களை மன்னரும் போற்றுவர் மக்களும் போற்றுவர்; வியப்பில்லையே.

இனி ஓரிடத்துப் பெரும் மண்டபமொன்றைப் பெரும் படைஞர் எழுப்பித் தந்துள்ளனர். ஊஞ்சல் மண்டபத்தை ஊரார் ஒருவர் உருவாக்கி உதவினர். திருமதில் திகழ் திருமுன்பும் திருவுருவும் உருவாக்கிய உயர்வை, கணிகை ஒருத்தி கைக்கொண்டாள். திருநடை மாளிகை முதல் திருமுன்பு ஈருகத் தோற்றுவித்த திருப்பணித் தமிழரின் தெய்வப் பணியாய் விளங்கிற்று - விளங்கும்; வியப்பில்லை!

கலைக்காகத் தலைதந்து மறைந்த தகையாளன் ஒருவனை தமிழர் மறக்கமுடியாது. மாபெரும் மண்டபங்களெல்லாம் அவற்றை எழுப்பிய மன்னவர் பெயரையே பெற்றிருந்தன. இதற்கு உத்தம சோழன் மண்டபம், இராசேந்திரசோழன் திருமண்டபம் போன்றவை எடுத்துக்காட்டாக அமையும். திருத்தொண்டர்தம் திருப்பெயர்கொண்ட மண்டபங்களும் உண்டு. சிறுத்தொண்டர் நம்பி மண்டபம் போன்றன அவற்றுள் சில.

திருக் கோயில்களைப் பத்தாண்டிற்கொருமுறை பழுது பார்க்கப் பொது நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. அத்துடன் நிலையான கொத்தர், தச்சர், கலைஞர் முதலிய யாவரும் அமர்த்தப் பட்டிருந்தனர். (தொடரும்)

## மார்கழித் திருவாதிரையில் தில்லைக் கூத்தப்பெருமான்
## திநநடன தரிசனத்திற்கு



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
அன்பர்களுடன் எழுந்தருளுதல்.



அங்காரகமூர்த்தி (செவ்வாய்)

# தொல்காப்பியச் சொல்லதிகார - - - விளக்கக் கட்டுரைகள்.

பண்டித வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

( மலர் 24, இதழ் 1, பக்கம் 23 இன் தொடர்ச்சி )

(அ) தத்தம் குறிப்பிற் பொருள்செய்குவன :

'மன்' என்னும் சொல் கழிவு, ஆக்கம், ஒழியிசை ஆகிய மூன்று பொருளில் வரும் (4). நன்னூலார் இம் மூன்றனோடு அசைநிலை, மிகுதி, நிலைபேறு ஆகிய மூன்றையும் கூட்டி மன்னைச் சொல் ஆறு பொருளில் வருமென்பர் (நன். இடை : 13).

'தில்' என்னும் சொல் விழைவு, காலம், ஒழியிசை ஆகிய மூன்று பொருளில் வரும் (5). அத்தில்லைச் சொல் விழைவின் கண் வருகின்றபொழுது தன்மை யிடத்திற்கே வரும் (12). இதனையே நன்னூலாரும்

"விழைவே காலம் ஒழியிசை தில்லே" (இடை : 12) எனக் கூறுதல் காண்க.

'கொன்' என்னும் சொல் அச்சம், பயனின்மை, காலம், பெருமை ஆகிய நான்கு பொருளில் வரும் (6)

'உம்' என்னும் சொல் எச்சம், சிறப்பு, ஐயம், எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் ஆகிய எட்டு பொருளில் வரும் (7). இதனையே நன்னூலார்.

"எதிர்மறை சிறப்பையம் எச்சமுற் றளவை
தெரிநிலை யாக்கமோ டும்மை எட்டே" (இடை : 6)

எனக் கூறுதல் காண்க.

எச்சப்பொருளில் வரும் உம்மையும், எதிர்மறைப் பொருளில் வரும் உம்மையும் தம்முள் இயைந்து வாரா. (எ-டு) 'சாத்தனும் வந்தான் கொற்றன் வரலுமுரியன்' என்றவிடத்து இவ்விரு

உம்மைகளும் முறையே வந்தவாறும் அவை தம்முள் இயையாத வாறும் கண்டுகொள்க (35).

எச்சவும்மையொடு ஒருசொல் வரின் அதனெடு அதனல் தழுவப்படும் எஞ்சுபொருட்கிளவியும் ஒருங்குவரும். அவ்விரு சொற்களில் எவையேனும் ஒருசொல் உம்மையின்றி வருமாயின் அவ்வும்மையில் சொல்லே முன்னும் உம்மையுடைய சொல்லேப் பின்னும் கிளத்தல் மரபாம். (எ-டு) 'சாத்தனும் வந்தான்' என எச்சவும்மைவருமாயின் அதனல் தழுவப்படும் 'கொற்றனும் வந்தான்' எனும் எஞ்சுபொருட்கிளவியும் உடன் வரும். 'சாத்தன் வந்தான் கொற்றனும் வந்தான்' என்றவிடத்து கொற்றனும் வந்தான் என்ற சொல் உம்மையில்லாது வரின், 'கொற்றன் வந்தான்' என அதனே முன் வைத்து 'சாத்தனும் வந்தான்' என்ற சொல்லேப் பின் வைக்கவேண்டுமென்பதாம். இங்ஙனம் உம்மையில்லாத சொல்லேச் 'செஞ்சொல்' என்று குறிப்பர் ஆசிரியர். இதனேச் செஞ்சொல் என்றது, எதுகை மோனே முதலியன இல்லாதவற்றைச் 'செந்தொடை' எனவும், பொருள் விளங்காத மழலேச் சொல்லேச் 'செங்கீரை' எனவும் வழங்குவது போலாமென்க (36).

"செவ்வெண் ஈற்றதாம் எச்ச வும்மை" (இடை : 8)
என நன்னூலாரும் கூறுதல் காண்க.

முற்றும்மைப் பொருளில் வருகின்ற உம்மை அம் முற்றுப் பொருளேத் தராது எச்சப்பொருளேயும் தரும் என்பதாம் (37), நன்னூலாரும்

"முற்றும்மை ஒரோவழி எச்சமு மாகும்" (இடை : 7)
எனக் கூறுதல் காண்க.

'ஓ' என்னும் சொல் (ஓகாரம்) பிரிநிலே, வினு, எதிர்மறை ஒழியிசை, தெரிநிலே, சிறப்பு ஆகிய ஆறு பொருளில் வரும் (8), நன்னூலார் இவ்வாறேடு கழிவு, அசைநிலே ஆகிய இரண்டை யும் கூட்டி ஒகாரம் எண்பொருளில் வருமென்பர் (இடை : 4).

'ஏ' என்னும் சொல் (ஏகாரம்) தேற்றம், வினு, பிரிநிலே, எண், ஈற்றசை ஆகிய ஐந்து பொருளில் வரும் (9). இந்நூற்பா வினேயும் ஏகாரம் இசைநிறையாயும் வரும் என்னும் கருத்துடைய 24-ஆம் நூற்பாவினேயும் இணைத்தே நன்னூலார்,

"பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை யெனவா றேகா ரம்மே" (இடை : 3)

எனக் கூறுமாறு காண்க.

செய்யுளின்கண் வருகின்ற ஈற்றசை ஏகாரம் தனக்குரிய இரு மாத்திரையினின்றும் குறுகி ஒரு மாத்திரையாதலும் உண்டு (38). மேற்கூறிய தெளிவின்கண் வருகின்ற ஏகாரமும் சிறப்பின்கண் வருகின்ற ஓகாரமும் அளபெடுத்தலும் உண்டு (13).

'என' 'என்று' என்னும் சொற்கள் வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர் ஆகிய ஆறு பொருளிலும் வரும் (10, 11). இதனையே நன்னூலார்

"வினைபெயர் குறிப்பிசை யெண்பண் பாறினும்
எனவெனு மொழிவரும் என்று மற்றே" (இடை : 5)

எனக் கூறுதல் காண்க.

'மற்று' என்னும் சொல் வினைமாற்று, அசைநிலை ஆகிய இருபொருளிலும் வரும் (14). நன்னூலார் இவ்விரண்டனோடு பிறிது என்னும் ஒன்றைக் கூட்டி மற்று என்னும் சொல் மூன்று பொருளில் வருமென்பர் (இடை : 14).

'எற்று' என்னும் சொல் கழிந்தது என்ற பொருளில் வரும் (15).

'மற்றையது' என்னும் சொல் ஒருவன் முன்னர்க் கருதப் பட்ட பொருளொழிய அதன் இனப்பொருளைக் குறித்து வரும் (16). இதனையே

"மற்றைய தென்பது சுட்டிய தற் கினம்" (இடை : 15)
என நன்னூலாரும் கூறுமாறு காண்க.

'மன்ற' என்னும் சொல் தெளிவுப் பொருளில் வரும் (17).

'தஞ்சம்' என்னும் சொல் எளிது என்ற பொருளில் வரும் (18).

'அந்தில்' என்னும் சொல் ஆங்கு என்னும் இடப்பொருளில் வரும் (19).

'கொல்' என்னும் சொல் ஐயப்பொருளில் வரும் (20). இச் சொல் அசைநிலைப் பொருளிலும் வருமென நன்னூலார் கூறுவர் (இடை : 16).

'எல்' என்னும் சொல் விளங்குதல் என்ற பொருளில் வரும். எல்லென்பது உரிச்சொல் போன்றிருப்பினும் ஆசிரியர் இடைச் சொல்லென்று ஓதினமையான் இடைச்சொல்லென்றே கொள்ள வேண்டும் என்பர் சேனாவரையர். உரிச்சொல் குறைச் சொல் லாய் வருமென்றும், இது குறையின்று நிற்றலின் இடைச் சொல்லேயாம் என்றும் தெய்வச்சிலையார் கூறுவர் (21).

இரண்டு மாத்திரை உடையதும், மொழிக்கு ஈறாகாதது மான 'ஔகாரம்' பிரிவில் அசைநிலையாய் இரட்டித்து நிற்குமிடத் தும், அங்ஙனம் இரட்டிக்காது அளபெடையாய் நிற்குமிடத்தும், அளபெடையின்றித் தானேயாய் வருமிடத்தும் சொல்லுவான் குறிப்பிற்கேற்ப மாறுபாட்டுப் பொருளையோ அல்லது சிறப்புப் பொருளையோ தரும் என்பதாம். இவ் ஔகாரத்தை இக்காலத் தார் ஓகாரமென்று வழங்குப. இதுவே இளம்பூரணர், சேனா வரையர் ஆகிய இருவருக்கும் கருத்தாம். நச்சினார்க்கினியர் ககரத்தோடு இணைத்து 'கௌ' என்றே உதாரணம் காட்ட வேண்டும் என்பர். தெய்வச்சிலையார் "ஈரளபிசைக்கும் இறுதியிலுயிரே" என்ற தொடருக்கு உயிர் எழுத்துக்களுள் ஔகாரமல்லாத நெடில்கள் ஆறும் என உரைகாண்பர் (33).

'நன்றே' 'அன்றே' என்பவற்றிலுள்ள ஏகாரமும், 'அந்தோ' 'அன்னோ' என்பவற்றிலுள்ள ஓகாரமும் சொல்லு வான் கருத்தின் வழிநின்று தத்தம் பொருளுணர்த்தும் (34).

( தொடரும் )

---


## குமரகுருபரன்

**ஆண்டுச் சந்தா 1 — 50**

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல் வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A. B. L., அவர்கள்
"குமரகுருபரன்" ஆபீஸ் ஸ்ரீவைகுண்டம்.

# குறிஞ்சிக் கடவுள்

வித்துவான். திருமதி. ப. நீலா

எதிரிலாத பத்திதனை மேவி
இனிய தாள் நினைப்பை இருபோதும்
இதய வாரிதிக்குள் உறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே
கதிரகாம வெற்பில் உறைவோனே
கனக மேருவொத்த புயவீரா
மதுரவாணி உற்ற கழலோனே
வழுதிகூன் நிமிர்த்த பெருமாளே!

மணம். அழகு, இளமை, கடவுள்தன்மைபோன்ற கல்யாண குணங்களைப் பெற்ற கந்தனின் திருப்பெயர் எண்ண எண்ண இன்பந்தரும். குன்றுதோறும் குடிகொண்ட குமரப்பெருமானை 'குறிஞ்சிக்கடவுள்' என்றழைப்பதில் தமிழ் பயிலும் நெஞ்சத்தார்க்குத் தனியார்வம் உண்டு. செந்தமிழ்த்தெய்வம் குடிகொண்ட திருத்தலங்களுள் பாக்கும் தெங்கும் பிணைந்து வளரும் ஈழத்திருநாட்டின் எழில்பொங்கும் கதிர்காமத்தலம் தனியிடத்தைப்பெற்றதோடு, தலைமை இடத்தையும் பெற்றுள்ளது.

நம்முடைய சமயவாதிகள் இறைவனை மூன்று நிலைகளில் வழிபடுவர். விநாயகர், நடராசர் போன்ற ரூபநிலைகளையும், சிவலிங்க வழிபாடு என்னும் ரூபாரூப நிலையையும், சிவம், சக்தி. நாதம். விந்து, என்னும் அரூப நிலையையும் வழிபடும் தன்மை கொண்டவர்கள்.

சிவம் சக்தி நாதம் விந்து சதாசிவன்; திகழுமீசன்
உவந்தருள் உருத்திரன் தான், மால். அயன்; ஒன்றின் ஒன்ருய்
பவந்தரும் அருவம் நாலிங்கு, உருவம் நாலுபயம் ஒன்ருய்
நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் என்பர்.

—சிவஞானசித்தியார்.

ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலாத் தெய்வத்தின் சக்தியை உணருகிறுர்கள் மக்கள். ஆகவே அருப வழிபாட்டிலேகூட ஆழ்ந்த பற்றுகொண்டிருக்கிறுர்கள். கதிர்காமக்கந்தன் இந்த வழியில்தான் நமக்கு அருள் வழங்குகிறுன்.

ஆறுமுகப்பெருமான் பன்னிரண்டு திருக்கரங்களோடுகூட அருள்வழங்கும் காட்சி நமக்குத் தெரியும்.

மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்; ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலினுவந்து வரங்கொடுத் தன்றே; ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅது
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே; ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசை விளக்கும்மே; ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமமுருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே; ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே.

—திருமுருகாற்றுப்படை

நக்கீரர் காட்டும் குமரனின் கோலம் இது.

கோலம் காட்டாத குழகன் ஈழத் திருநாட்டின் குடிகட்குச் சிறந்த வரப்பிரசாதியாக இருக்கிறுன். மொழி, மத, இன பேத மில்லாமல் மக்களனைவரும் ஒன்றுகூடும் ஒரே இடம் கதிர்காமம்தான்.

போருக்குமுன் முருகன் பாசறையாகக் கதிர்காமத்தைக் கொண்டிருந்தான் - ஆகவே வீரம் செறிந்த கோலம் மக்கள் பார்வைக்கு இல்லாமல் இருக்கிறது என்பர் சிலர். கண்டவர் விண்டிலர் - விண்டவர் கண்டிலர் என்றபடி கருவறையுள் என்ன இருக்கிறது என்பதை இதுவரை பார்த்தார் ஒருவரும் இல்லை. மந்திரங்கள் எழுதப்பெற்ற யந்திரம் ஒன்று உள்ளே இருப்பதாகவும் கப்புராளைமார்கள்கூட (பூசாரிகள்) ஓர்எல்லைவரைதான் உள்ளே செல்லலாம் என்றும் கூறுகிறுர்கள்.

கோயிலுள் நுழையுமுன் எத்தகைய எண்ணங்கள் இருந்தாலும், சந்தேகங்கள் எழுந்தாலும் தெய்வ சாந்நித்யம்நிறைந்த சந்நிதியில் நின்றஉடனே ஐந்துபேரறிவும் கண்களே

கொள்ளும் பரவசநிலை வந்தெய்துகிறது. மன அழுக்கும் உடல் அழுக்கும் நீங்க மாணிக்க கங்கையில் நீராடிக் கரை யேறியவுடனேயே எழும் புத்துணர்ச்சியால் கரங்களிரண்டையும் தலைமேல் உயர்த்தி தம்மை மறந்த நிலையில் ஆறுமுகப் பெருமானுக்கு 'அரோகரா' - என்று கூவிக், குழறி, அலறிக் கொண்டு பக்தர்கள் கோயிலுள் செல்கிறார்கள்.

கோயில் வழிபாட்டு முறைகூட சற்று வியப்பையும் அச்சத்தையும் தருவதாக இருக்கிறது. குருக்கள் தம்வாயினைத் துணியினால் தலையின் பின்புறத்தோடு இறுகக் கட்டிக்கொண்டு நிவேதனம், தீபாராதனை ஆகிய காரியங்களைச் செய்கிறார். நிவேதனப் பொங்கலை பக்தி சிரத்தையோடு மக்கள் வாங்கி உண்ணுகின்றனர்.

முருகன் கோயில் - வள்ளிகோயில் அர்ச்சகர்களாக சிங்க ளவர்களும், தெய்வயானை கோவில், கதிரைமலை உரிமையாளர் களாக குருக்கள்மாரும் விளங்குகிறார்கள். முருகன் கோயி லருகில் புத்தபெருமான் கோயிலும், வள்ளியம்மன் கோயி லருகில் பள்ளிவாசலும் இருப்பதால் புத்தசமயத்தார் இஸ்லா மியர் போன்ற மதத்தாரும் வேறுபாடில்லாமல் கதிர்காம யாத்திரை செய்கிறார்கள். முருகனுக்குச் சித்திரை, ஆடி, கார்த்திகை மாதங்களில் விழாக்கள் நடைபெறுகின்றன. இதிலே ஆடிமாத 'ஆடிவேல்விழா' மிகச் சிறப்புடன் கொண்டாடப் படுகிறது, பதினான்கு நாட்கள் நடக்கும் இவ்விழா நாட்களில் யந்திரம் அடைக்கப்பட்ட பேழையை யானைமீது ஏற்றி கோயிலை வலம்வரச் செய்கிறார்கள். இஸ்லாம், பௌத்த மதத்தாரின் விழாக்களும் இந்தமாதங்களிலேயே வருவதால் இந்தநாட்களில் கூட்டத்திற்குக் குறைவேயில்லை.

கதிர்காமத்தையொட்டிச் செல்லக் கதிர்காமம், கதிரைமலை களும் பிரசித்தி பெற்றுள்ளன. முருகன் வள்ளியம்மை திருமணத்திற்கு உதவிய விநாயகப்பெருமான், வேங்கைமரம், ஆலோலம் என்று கூறி வள்ளி கிளியோட்டிய தினைப்புனம் எல்லாம் அழகுடன் செல்லக்கதிர்காமத்தில் இருக்கின்றன. சூராதியர்களை வதைத்துத் தேவர்களைச் சிறைமீட்ட பின்பு முருகன் தனது வேற்படையை கதிரைமலைமேல் நட்டுள்ளாராம் காடுசூழ் கதிர்காமம் இன்று யாத்திரைக் குரிய முறையில் வசதியாக இருக்கிறது. ஈழத்தின் பிரதான நகரமாம் கொழும்பி லிருந்து ஏறக்குறைய நூற்று எண்பது கல் தொலைவிலுள்ள இப்புண்ணியத் தலத்திற்குப் பேருந்துகளும், மகிழ்வுந்துகளும்

செல்லும் முறையில் உயரிய பாட்டையும் பிறவசதிகளும் உண்டு.

பதைபதைக்கும் மனிதமனம் பரபரக்கும் உலகியலை விடுத்து அழியா நெறிகாட்டி அழைக்கும் அழகனை நாடிச் செல்லும்போது குக்குடமும் கூர்வேலும் அஞ்சாதே என்று அபயமளித்து வரவேற்கிறது. ஈழத்திற்கும் இந்தியாவிற்கும் இதயம்தொட்ட இணைப்பு இன்னலேதுமின்றிக் கிடைக்குமானால் எண்ணற்ற தமிழர்களின் இதயதாகம் தீரும் என்பதைச் சொல்லவா வேண்டும்.

வாக்கிற்கு அருணகிரியார் என்று நம்மாலே சொல்லப்படும் பெரியார்- தமது திருப்புகழில் கதிர்காமக்கந்தனையும் பிணைத்துப் பாடியுள்ளார்.

ககன கூட பாடீர தவள சோபி தாளான
கவன பூத ராரூட
கனக காரணு ஞானகருணை மேருவேயீழ
கதிரகாமம் வாழ்தேவர் பெருமாளே. என்றும்

கமலயோனி வீடான ககனகூட மீதோடு
கலபீல மாயூர இளையோனே
கருணை மேருவே யீறில் கருணை வாரியேயீழ
கதிரகாமம் வாழ்தேவர் பெருமாளே. என்றும்

பாடியருளிய அருணகிரியார் மற்ருெரு பாடலில் ஈழத்தின் இயற்கை வளத்தினையும் படம்பிடிக்கிருர்,

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும் குற்ருலக் காட்சியே மாணிக்ககங்கைக் கரையில் நாம்காணும் காட்சியாகும்.

கரிய யூகத்திரள் பலவின் மீதிற்சுளைக்
கனிகள் பீறிப் புசித் தமராடிக்
கதலி சூதத்தினில் பயிலு மீழத்தினிற்
கதிரகாமக் கிரிப் பெருமாளே.

எதிரிலாக் கதிர்காமம் வாழ் கந்தவேளை நினைத்த மாத்திரத்தில் நம் மனம் அருணகிரியார் வேண்டும் வரத்தினைத்தான் வேண்டும்.

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சொற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

# சஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

( மலர் 24, இதழ் 1, பக்கம் 31 இன் தொடர்ச்சி)

हविश्च षड्विधं देयं पायसं शुद्धमन्नकम् ।
गुलान्नं कृसरान्नं च दध्यन्न मौद्गमन्नकम् ॥ 464

प्रतिद्रव्येण संयुक्तमाढकद्वय तण्डुलम् ।
अनेक व्यञ्जनैर्युक्तमपूपादि समन्वितम् ॥ 465

இறைவனுக்கு நிவேதனம் செய்யப்படும் நிவேதனமானது, பாயசான்னம், சுத்தான்னம், சக்கரைப்பொங்கல், எள்ளன்னம், தயிரன்னம், வெண்பொங்கல் என்று ஆறுவிதமாகும். இவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மரக்கால் வீதம் அரிசியும் அந்தந்த நிவேதனத்திற்குரிய வெல்லம், பயத்தம்பருப்பு, நெய், மிளகு, பால், எள், நல்லெண்ணெ, உப்பு, கடலைப்பருப்பு, கருவேப்பிலை, இஞ்சி முதலிய திரவியங்களையும் அததற்குரிய அளவுடன் கூடியதாய், அனேகவிதமான வியஞ்சனங்களுடன் கூடியதாகவும் அதிரஸம், வடை, தேங்குழல், புட்டு, சுழியன் முதலிய பக்ஷயங்களுடன் கூடியதாகவும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும்.

व्रीहिरेकफलं प्रोक्तं शाली दशगुणं भवेत् ।
प्रियंगुश्शत संप्रोक्तोनीवारस्तु सहस्रकम् ॥ 466

गोधूमस्तु भवेल्लक्षमनन्तं वैणवो भवेत् ।

சாதாரணமான சுவர்ணவாரி, ஒட்டடன் முதலிய நெல்லிலிருந்து குத்தப்பட்ட அரிசி சாதாரண பலனையுடையது. சம்பா நெல்லின் அரிசி இதைவிட பத்துமடங்கு அதிகமான பலனையுடையது. தினை அரிசி நூறுபங்கும், புல்அரிசி ஆயிரம் பங்கும், கோதுமை லக்ஷம் பங்கும், மூங்கிலரிசி அளவுகடந்ததான பலனுமுடையது.

भक्ष्यं भोज्यं च पेयं च लेह्यं शोष्यं च पञ्चधा ॥ 467

नाना फलैश्च संयुक्तं पानीयैश्च समन्वितम् ।
स्थालिका क्षाळनं कृत्वा नैवेद्यं च प्रपूरयेत् ॥ 468

व्यञ्जनैरावृतं चैव पूरयेदन्न कोपरि ।
पिधाय शुद्धवस्त्रैश्च पाचकोपरि धारयेत् ॥ 469

கடித்துச் சாப்பிடக்கூடியது பல் உபயோகிக்காமல் சுவைத்து உண்பது, பருகக்கூடியது, நக்கக்கூடியது, ரஸத்தைமட்டும் அருந்தி சக்கையை வெளியில் தள்ளும்படி உள்ளது என்ற இவ்வாறு ஐந்துவிதமாகவுள்ள நைவேத்யங்களை சுத்தமாக அலம்பி எடுக்கப்பட்ட நைவேத்திய பாத்திரத்தில் முதலில் அன்னத்தை நிரப்பி அதன்மேல் வியஞ்சனங்களையும் வரிசையாக நிறைத்து சுத்தமான வஸ்த்திரத்தினுல் மூடி, பரிசாரகருடைய சிரசில் வைத்துக்கொள்ளும்படி செய்யவேண்டும்.

वाद्यघोष समायुक्तं यागशालां प्रवेशयेत् ।
शिवाग्रे स्थापयित्वातु अंबुनाप्रोक्षयेत्ततः ॥ 470

देवस्यत्वेति मंत्रेण नैवेद्यं दापयेत्ततः ।
धूपान्नीरांजनान्तंतु उपचारान्समर्पयेत् ॥ 471

வாத்யகோஷங்களுடன் கூடியதான அந்த நைவேத்யத்தை ப்ரதக்ஷிணமாக யாகசாலைக்குக் கொண்டுவந்து வேதிகையின் மீது வீற்றிருக்கும் சிவமூர்த்தியின் எதிரிலுள்ள சதுஷ்பாதியில் (ஸ்டூல்) வைத்து, அர்க்கிய ஜலத்தினுல் "தேவஸ்யத்வா" என்ற மந்திரம் சொல்லி புரோக்ஷித்து ஆசாரியன் ஹஸ்தத்தினுல் நிவேதனம் செய்யும் முறைப்படி சுவாமிக்கு நிவேதனம் செய்ய வேண்டும், பிறகு தூபம் தொடங்கி கற்பூர நீராஜனம் வரையில் உள்ள உபசாரங்களை வரிசையாகச்செய்து உபசரிக்கவேண்டும்.

मंत्रपुष्पादिनाऽभ्यर्च्य दद्यात्भस्मं गुरूत्तमः ।
त्रिकालमन्त्रलिङ्ग च तथानित्योत्सवादिकम् ॥ 472

नित्यहोमादिकार्यं च भोगालय निवेशनम् ।
सर्वनित्योत्सवं कुर्याच्छिव यागस्य मण्डपे ॥ 473

மந்திரபுஷ்பம் முதலியதால் பூஜித்து அதாவது மந்திர புஷ்பம் க்ஷமாபணம், தோத்திரம் ஆசீர்வாத வசனம் வரையில் சிவசன்னிதியில் விக்ஞாபனம் செய்துகொண்டு ஆசாரியன் விபூதி அளிக்கவேண்டும். ஆலயங்களில் ப்ரதிதினம் முக்காலங் களிலும் செய்யப்படும் அன்னலிங்கம் நித்யோத்ஸவம் நித்ய ஹோமம், போகாலய நிவேசனம் யாவும் யாகசாலையிலேயே செய்யப்படவேண்டும்.

तीर्थं नैमित्तिकंचैव शिवयागेविवर्जयेत् ।
अङ्कुराद्यभिषेकान्तं मध्याह्ने भोजयेद्विजान् ॥ 474

सहस्राद्ययुतपर्यन्तं यथाविथानु सारतः ।
सर्वदोषनिवृत्यर्थं कुर्यत्ब्राह्मण भोजनम् ॥ 475

தீர்த்தோத்ஸவம் மற்றய நைமித்திக உத்ஸவங்கள் சிவ யாகத்தின்போது கிடையாது. சிவயாகத்தின்பொருட்டுச் செய் யப்படும் அங்குரார்ப்பணம் என்ற கிரியை ஆரம்பம் முதல் கும்பாபிஷேகம் முடிய பகலில் அந்தணர்களுக்கு அன்னமளிக்க வேண்டும். சர்வதோஷமும் நீங்கும்பொருட்டு, ஆயிரம் பிராமணர் முதல் பதினாயிரம் பிராமணர் வரையில், பொருளுக்குத் தக்கவாறு பிராம்மணபோஜனம் செய்விக்கவேண்டும்.

भक्यातस्सप्तरात्रंवा पञ्चरात्रमथापिवा ।
एकरात्रमथोसद्यः कुर्याद्दिवाधिवासनम् ॥ 476

होतव्यं प्रत्यहं स्वस्वमंत्रेण पूजयेच्छिवम् ।
एवमेवं विधानेन नित्यकर्म समापयेत् ॥ 477

பக்தியுடன் ஏழுநாள் 12 காலம் அல்லது ஐந்துநாள் (8 காலம் அல்லது மூன்று நாள் 4 காலம்) பூஜை ஹோமம் செய்து அதிவாஸம் செய்விக்கவேண்டும், அல்லது ஒரு காலத் திலோ சத்யோதிவாஸமாகச் செய்யலாம். முற்கூறியவாறு தினம் தோறும் அந்தந்த மந்திரங்களால் ஹோமம் செய்து பூஜை செய்யவேண்டும். இவ்வாறு முறை தவறாமல் சாயங்காலம், பிராதக்காலம் இருவேளைகளிலும் யாகபூஜை ஹோமம் பூர்ணாகுதி தீபாராதனை மந்திரபுஷ்பம் க்ஷமாபணம், தோத்திரம் முதலியவை செய்யவேண்டும்.

इत्येवं पूजयेद्रात्रौ प्रभातेविमलेसति ।
स्नात्वा गुरुर्विधानेन नित्यकर्मसमापयेत ॥ 478

यागशालां प्रविश्याऽथ ऋत्विक्भिः परिचारकैः ।
विघ्नराजंच संपूज्य संकल्पंच ततः परम ॥ 479

पुण्याह पञ्चगव्यं च कुंभस्थापन पूर्वकम ।

இவ்வாறு முதல்நாள் இரவு பூஜித்து மறுதினம் காலையில் ஆகாயம் விமலமாக இருக்கும் நேரத்தில் ஆசாரியன் ஸ்னானம் முதலிய நித்யகர்மாக்களைச் செய்துமுடித்து ருத்விக்குகள் பரிசாரகர்களுடன் கூட யாகசாலைக்குச்சென்று விக்னேச்வரபூஜை செய்து சங்கல்பத்துடன் வருணகும்பஸ்தாபனம் செய்து புண்யாகவசனம் பஞ்சகவ்யம் பூஜித்து சுத்தியின் பொருட்டு ப்ரோக்ஷிக்கவேண்டும், புண்யாக பஞ்சகவ்யபூஜை, காலம் தோறும் பூஜை ஆரம்பம் செய்யும்முன்பு செய்யவேண்டும்.

द्वारादि गुरुपूजान्तं पूर्ववत्पूजयेत्क्रमात् ॥ 480

शिवकुम्भान्तिकं गत्वा पाद्यादि स्थापयेद्गुरुः ।
निर्माल्यं च विसृज्याऽथ कल्पयेत्स्थिरमासने ॥ 481

मूर्त्तिध्यानं च विन्यस्य मूलेनावाह्यदेशिकः ।
पाद्यादि धूपदीपौ च तांबूलानि निवेदयेत् ॥ 482

துவாரபூஜை முதல் குருபக்திபூஜை முடிய முறைப்படி பூஜைசெய்து சிவகும்பத்தினுடைய எதிரில் சென்று, பாத்யம், அர்க்கியம், ஆசமனம் இவைகளை ஸ்தாபிக்கவேண்டும், பிறகு சிவ கும்பத்திலிருக்கும் நிர்மால்யத்தை விஸர்ஜனம் செய்து கும்பத்தில் ஆதாரசத்திமுதல் குடிலாசத்தி யீருகவுள்ள ஸ்திராஸன பூஜை முடித்து வித்யாதேஹத்தியானம் செய்து சிவமூலமந்திரத்தால் ஆவாஹனம் செய்து பாத்தியம் அர்க்கியம் ஆசமனம் கொடுப்பது முதல் பஞ்சாவரணம் வரையில் பூஜித்து தூபதீபம் நைவேத்யம் தாம்பூலம் சமர்ப்பணம் செய்யவேண்டும்.

( தொடரும் )

# தமிழ் கூறு நல்லுலகம்

திரு. அ. கலியபெருமாள், எம். ஏ.,

(மலர் 24, இதழ் 2, பக்கம் 108 இன் தொடர்ச்சி)

## 3. வாணிகக் கூடம்

குவலயத்தில் மேன்மையாகக் கொள்ளப்படும் இசைசான்ற இருவகைத் தொழில்களுள் ஒன்ருக இருப்பதாலும், கூடல்மா நகரின் பூதக்கடவுள் துலாக்கோலை ஏந்தியிருப்பதாலும் வாணிகத்தின் பெருமை விளங்கும். வாணிகம் ஒரு நாட்டின் வளமையை எடுத்துக்காட்டுவதாம். நாட்டின் பொருளாதாரம், நடைபெறும் வாணிகத்தைப் பொறுத்தது. நாடு மிகுதியாகப் பொருள்களை உற்பத்திசெய்தால்தான் மக்கள் தம் தேவைகளைப் பூர்த்திசெய்து கொண்டு வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்ய முடியும். அதனுல் நாட்டிற்குஅந்நியச் செலாவணியும் நிறையக் கிடைக்கும். மண்ணுலகில் விண்ணுலகை வடிக்கவும் முடியும்.

தமிழ் நாட்டு வாணிகம் மிகப் பழமை வாய்ந்தது. உலகத்து நாடுகள் பெருத வாணிக உயர்வை நம்நாடு பெற்றிருந்தது. இருக்கு வேதத்தில் "பணிகர்" என்ற சொல் வருகிறது. "வணிகர்" என்ற தமிழ்ச் சொல்லே "பணிகர்" எனக் குறிக்கப் பட்டதென்றும், இருக்கு வேதத்துப் பணிகர் தமிழ்நாட்டு வணிகரே என்றும் ஆராய்ந்து கூறுகிருர் மறைமலை அடிகள். இதனுல் தமிழர் வாணிகம், இருக்குவேத காலத்திற்கும் முற்பட்டது; பழமை வாய்ந்தது என்பது தெளிவாகும்.

உள்நாட்டு வாணிகம், அயல்நாட்டு வாணிகம் இரண்டிலும் உயர்வு பெற்றிருந்தது தமிழகம். அயல் நாட்டு வாணிகத்தில் பெருமையடைய வேண்டுமெனில் நமக்குத் துறைமுக வசதி பெற்ற கடற்கரையும் அலைகடற் செலவில் ஆற்றலும், அருங்கலம் அமைக்கும் திறனும் இருத்தல் வேண்டும், முசிறியும் தொண்டியும் முத்துப்படு கொற்கையும் ஒலிபுனற் புகாரும் இருக்கத் தமிழ் நாட்டின் துறைமுக வசதிக்கு என்ன குறை!

பெரிப்ளுஸ் கி. பி. முதல் நூற்றுண்டிலே தோன்றிய ஒரு கிரேக்க நூல். தமிழ்நாட்டு வாணிகச் சிறப்பை எடுத்துக் கூற வந்த அஃது, தொண்டி, முசிறி முதலிய துறைமுகங்கள் பற்றிப் பேசுகிறது. பாண்டிநாட்டின் கொற்கை போன்ற துறைகள் திறம்படப் பாதுகாக்கப்பட்டு வந்தன. இதனைப் பிளினி - கி. பி. முதல் நூற்றுண்டிலே இருந்த யவன அறிஞன் எடுத்துரைக்கிருன்.

அலைகடற் செலவில் தமிழருக்கு ஈடுகொடுக்க அகிலத்தில் யாருமில்லை என்றே கூறவேண்டும். குடகடலில் நாவாய் ஓட்டிக்குட்டுவர் ஆதிக்கம் செலுத்தியதை,

" சினமிகு தானை வானவன் குடகடல்
பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறகலம் செல்கலாது " (புறம் 126.)

என்னும் மாருக்கத்து நப்பசலையார் கூற்ருல் அறியலாம். கடலில் ஏற்படும் இடையூறுகளைக் கடக்கும் வலிமை பெற்றிருந்தனர்; கடற்கொள்ளைக்காரர்களை ஒடுக்கிக் கடல் வாணிகம் பெருக்கினர். யவன ஆசிரியர் பிளைனிகூட முசிறித்துறையின் கடற் கொள்ளைக்காரர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்ருர். கடலில் பலநூறு காதங்கள் பழுதின்றிச் செல்லுதற்குரிய வகையில் கலங்களை அமைத்துக் கொண்டனர் தமிழர்.

மிளகும் யானை வெண்கோடும், நறுமணப் பொருள்களும் மிகுதியாக ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதைப் பிளைனியின் கூற்றிலிருந்து அறியலாம். இற்றைக்கு ஏறத்தாழ 1800 ஆண்டுகட்கு முன் வாழ்ந்த தாலமி, புகாரிலிருந்தும் புதுவையிலிருந்தும் முத்தும், மெல்லிய துணிகளும் ஏற்றுமதி செய்யப்பட்டன என்று கூறுகிருர். இனி, இலக்கியம் காட்டும் கடல் வாணிகம் காண்போம்.

அலைகடல் நடுவண் பலகல மோட்டித் தமிழகம் வாணிகம் நடத்தியது என்பதற்குப் பல இலக்கிய ஆதாரங்கள் உள்ளன. பாண்டிநாட்டுக் கடற்கரையில் சரக்குப் பறித்தற்கு மரக்கலங்கள் நின்றுகொண்டிருக்கின்றன. அச்சம்தரும் கடலில் அலை, பிளவுபடப் பாய்விரித்து, இன்னிசை முரசியம்ப, வந்தவை. பொன்னை மேலும் மேலும் தருதற்குக் காரணமாகிய சிறந்த

சரக்குகளை நாட்டுமக்கள் நுகரும்படிக் கரையிலே கொண்டு வந்து தருகின்றன. வாணிகம் வாய்த்துவந்து இழிதலைச் செய்யும் இத்தகுகலத்தை மாங்குடி மருதனார் நமக்குக்காட்டுகின்றார்.

" வான்யைந்த இருமுந்நீர்ப்
பேஎம்நிலைஇய இரும்பெளவத்துக்
கொடும்புணரி விலங்குபோழக்
கடுங்காலொடு கரைசேர
நெடுங்கொடி மிசை இதைஎடுத்து
இன்னிசைய முரசு முழங்க
பொன்மலிந்த விழுப் பண்டம்
நாடார நன்கிழிதரும்
ஆடியற் பெருநாவாய் " (மதுரைக்காஞ்சி 75-83)

அயல்நாடுகளிலிருந்து வணிகர் இங்குள்ள பேரணிகலங்களைக் கொண்டு போதற்காக மரக்கலங்களோடு வந்திருக்கின்றனர். அவையாவும் பாய்விரித்துக் காற்றால் அசைக்கப்பெற்று வந்தவை. துறைமுகத்தே அவைகளில் ஏற்றிக்கொணர்ந்த பல்வேறு பண்டங்கள் இறக்கப்படுகின்றன. அதனால் எழும் ஓசை பட்டினமெங்கும் பரவுகிறது.

" வாலிதை எடுத்த வளிதரு வங்கம்
பல்வேறு பண்டம் இழிதரும் பட்டினத்து
ஒல்லென் இமிழிசை மானக் கல்லென
நனந்தலை வினைஞர் கலங்கொண்டு மறுக "
(மதுரைக்காஞ்சி 536 - 39)

முத்து, வளை, திப்பிலி, வெள்ளுப்பு முதலான பொருள்களை நாவாய் ஏற்றிச் செல்வதையும், புரவிகளை இறக்கிச் செல்வதையும், நனந்தலைதேத்து நன்கலம் உய்த்துப் போதலையும் முன்பு கண்டோம். மேற்றிசை நாடுகளிலிருந்து குதிரைகளும், வடதிசையிலிருந்து நுகர் பொருள்களும் தமிழ் நாட்டில் இறக்குமதி செய்யப்பட்டன என்று பெரும்பாணாற்றுப்படை பேசுகிறது.

" பால்கேழ், வாலுளை புரவியொடு
வடவளம் தரூஉம் நாவாய்" (பெரும்பாண் 319-21)

தமிழகத்துத் துறைமுகங்களில் புரவிகள் இறக்கப்பட்டதை,

" விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்
நனந்தலை தேஎத்து நன்கலன் உய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவி "
(மதுரைக். 320 - 22)

" நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும் " (பட்டினப். 185)
என்பனபோன்ற அடிகள் விளக்கும்.

பல்வேறு பண்டங்களைக் கலத்தில் ஏற்றிக்கொண்டு புறப் படுகின்றனர் வணிகர் பெருமக்கள். கடல்கடந்த நாடுகளில் அவைகளை இறக்கிவிட்டுப் பெரும்பொருளோடு திரும்புகின்றனர். கடலில் வெகுதூரம் போய்விட்டு வந்த காரணத்தால் கலம் பழுதுபட்டிருக்கிறது. அது மீண்டும் பயன்படத்தக்க வகையில் பழுதுகளைப் போக்கிப் பண்டுபோல வலியுடையதாகச் செய் கின்றனர்.

" பெருங்கடல் நீந்திய மரம்வலி உறுக்கும்
பண்ணிய வினைஞர் " (பதிற்றுப். 76)

சிதைந்த கலத்தைத் திருத்தும் கருவிக்குப் பயின் என்று பெயராம். இப்பயின் என்ற கருவியைப் பரிபாடல் குறித் திருப்பது காண்க. பாயும் கயிறும் பாய்மரமும் கெட்டுக் கலம் சிதைந்து கிடக்கிறது. அவ்வாறு சிதைந்த கலத்தைப் பயின் என்னும் கருவியால் நீகான் திருத்துகின்ருன்.

" இதையும் கயிறும் பிணையும் இரியச்
சிதையும் கலத்தைப் பயினல் திருத்தும்
திசையறி நீகான் " (பரிபாடல் 10.)

(தொடரும்)

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

Sri Veerateswaraswami Devasthanam, Korukkai.

We visited this shrine this morning. The temple has a very interesting Puranam, regarding its origin. We were very fortunate in visiting the same.

(Sd.) C. S. Ramachandran, I. C. S.
17—1—65. New Delhi.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

( மலர் 24, இதழ் 2, பக்கம் 98 இன் தொடர்ச்சி )

மாணுக்கன் : இந்திரன் முதலியோர், அயன், மால், உருத்திரன் இவர்களைப் பற்றி விளக்கமாக அருளினீர்கள் ; அவ்வாறே சிவகுமாரர்களைப் பற்றியும், சிவகணங்களைப் பற்றியும் அருளுதல் வேண்டும்.

ஆசிரியர் : நல்லது ; அவ்வாறே செய்வோம் : உலகத்தில் எவருக்கும் யாதொரு தலைமையும் இறைவனது திருவருளாலே தரப்படுவதாம். தலைமையைத்தரும் திருவருள், 'அதிகார சத்தி' எனப்படும். தலைமைகள் பலவகைப்படுதலின், அதிகார சத்திகளும் பலவாகச் சொல்லப்படும். அவற்றுள் ஒவ்வொருவரிடத்து ஒவ்வோர் அதிகாரசத்தி பதிந்து நின்று, ஒவ்வொரு தலைமையை நடத்துகின்றது. இவ்வுண்மையை என்றும் மறவாது உணர்ந்தும், அத்தலைமையிற் பற்றின்றியும் நிற்பவர் முத்தராவர். அவர்கட்கு, அத்தலைமை கிடைத்தற்கு ஏதுவாய் நின்ற பிராரத்த கன்மம் உள்ளத்தைத் தாக்காது, உடலூழாய்க் கழியும். அதனுல் அவர்கள், உடம்பு நீங்கிய பின்னர் இறைவனேடு இரண்டறக் கலத்தலாகிய பர முத்தியை அடைவர். அவ்வாறின்றி, அவற்றைத் தாமே தம் முயற்சியால் பெற்றதாக மயங்கி, அவைகளில் அழுந்துவோர் பெத்தராவர். அவர், அத்தலைமைகட்கு ஏதுவாய் நின்ற பிராரத்த கன்மம் தொலைந்தவுடன், அத்தலைமையின் நீங்கி, வேருெரு பிறவியிற் செல்வர். இவ்வகையில் மால், அயன், இந்திரன் முதலிய தேவர் பலரும் பெத்த நிலையில் உள்ளவர்கள். உருத்திரரும், வித்தியேசுரரும் இடைநிலையில் நிற்பவர்கள். இவர்கட்குமேல், அஃதாவது ஈசுர தத்துவத்திற்குமேல் அணு சதாசிவர் முதலாக, 'சிவர்' எனப்படுவோர் பலர் உளர். அவர் அனைவரும் முத்தர் - அபர முத்தர். இம் முத்திறத்தவர்களுள், 'சிவகுமாரர்' எனப்படுவோர், 'சிவர்' என்றே கொள்ளற்பாலர். எனினும் இவரை

உருத்திரருட் சிறந்தோராகக் கருதுவோரும் உளர். இவ்வாறு தேவர் முதலியோரிடை உள்ள வேறுபாடு தெரிந்துகொள்க. இன்னும் அபர முத்தர், 'இலயம், போகம்' என்னும் இரு நிலையில் நிற்றல் அன்றி, அதிகார நிலையில் வாரார் என்பதும், இடைநிலையில் நிற்போரும், பெத்தரும் அதிகார நிலையில் நிற்பவர் என்பதும் முன்னே கூறியவற்றை நினைக்க, 'கணம்' என்பது சுற்றமாகலின், அவ்வத்தலைவரது நிலையே, அவரது கணத்தவர்க்கும் ஆவது எனக்கொள்க.

மாணக்கன் : அவ்வாறாயின், அவ்வேறுபாடுகள், எவை பற்றி அறியப்படும்? அம்முத்திறத்தவர்களது நிலைகளை இவ்வாறன்றி மாற்றிக் கூறினால் என்னை? அஃதாவது, தேவர்களை, 'முத்தர்' என்றும், சிவர்களை, 'பெத்தர்' என்றும் இவ்வாறு கூறினால் என்னை?

ஆசிரியர் : 'பெத்தநிலையில் உள்ளோர்க்குப் பிறப்பு நீங்காது' என்பதும், 'முத்திநிலையில் உள்ளோர்க்குப் பிறப்பு இல்லை' என்பதும், 'மால், அயன் முதலிய தேவர்கட்குப் பிறப்பு நீங்கிற்றிலது' என்பதும் அனைவர்க்கும் உடன்பாடாதலின், அங்ஙனம் மாற்றிக் கூறுதல் பொருந்தாமையை அறிவாயாக. இதனானே இடைநிலையில் நிற்கும் உருத்திரர்க்குப் பிறப்பு, சிறுபான்மை நிகழினும் நிகழும் என்பதும் உணர்ந்துகொள்ளப்படும். அதற்கு, ஆலால சுந்தரருக்கும், அநிந்திதை கமலினி என்பார்கட்கும் பிறப்பு நிகழ்ந்தமைபோல்வனவே சான்றாம். முருகக்கடவுள் உருத்திர சன்மராய் வந்தமை கூறும் ஒருவரலாறு பற்றியே, அக்கடவுளை உருத்திரராகக் கருதுவோரும் உளர் என்றேம். விநாயகக் கடவுளையும் உருத்திரராகக் கருதுவோர் உளர். ஆயினும், அவர் பிறப்பெய்தினமை எங்கும் கேட்கப்படவில்லை; ஆகவே, அவரை, 'சிவர் - அபரமுத்தர்' என்றலே பொருந்தும். 'சுப்பிரபேத ஆகமத்தைக் கேட்டவர்களுள் விநாயகர் ஒருவர்' என்றும், 'அவர் சிவர்' என்றும் கூறப்படுதலையும் நினைவு கூர்க.

இனி, ஞானசம்பந்தரை முருகக்கடவுளே எனின், முருகக் கடவுள் உருத்திரர் என்பதாகும். முருகக் கடவுளை, 'சிவர்' எனின், ஞானசம்பந்தர், உருத்திரர்களுள் ஒருவரது அவதாரத்தினர் ஆவர். இங்ஙனம் இருதிறக் கொள்கைகள் இருத்தல் பற்றியே, சேக்கிழார், ஞானசம்பந்தரை,

" பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டின் அளித்தருள "

எனப் பொதுப்பட அருளிச்செய்து போயினர்.

இனி, 'உருத்திரசன்மராயும், ஞானசம்பந்தராயும் வந்தோர், பிறப்பிறப்பில்லாத முழுமுதற் கடளாகிய முருகப் பெருமானை வழிபட்டு, அவரது உலகத்தை எய்திய அபர சுப்பிரமணியர்கள் என்பாரும் உளர். பிறப்பிறப்பு இல்லாத முதற் கடளாகிய முருகக்கடவுள்' சம்பு பட்சமாகிய முருகக்கடவுள், அன்றி வேறல்லர். அவரைச் சிவபெருமானுக்கு வேருகக் கருதின், அவர் அபர முத்தராகிய சிவராவர். ஆகவே, முருகப் பெருமானைச் சிவபெருமானுக்கு வேறல்லாதவராகவோ, வேருனவராகவோ கருதி வழிபட்டு, அபர சுப்பிரமணியராவோர், பிறப்பற்ற நிலையை அடையின் அபரமுத்தராகிய சிவரும், பிறவியுறும் நிலையில் நிற்பின் இடைநிலையில் நிற்கும் உருத்திரரும் ஆதலன்றி வேறில்லை என உணர்ந்துகொள்க. இங்ஙனமே, வைரவர் வீரபத்திரர் முதலியோரும் பிறப்பில்லாதவர் எனின், அபரமுத்தரும், பிறப்பு உடையர் எனின் உருத்திரரும் ஆவர் என்பதும் தெரிந்துகொள்க.

இங்ஙனம் விரித்துக் காட்டியவற்ருல் பதியாகிய இறைவனையும், பசுக்களாகிய உயிரினத்தவர்களையும் அவர்களது தன்னியல்பு (சொரூபலக்கணம்) பற்றிப் பிரித்தறிந்து கொள்வதல்லது, பொதுவியல்பு (தடத்த லக்கணம்) பற்றி அறிந்து கொள்ளுதல் அரிதாகும். பதியது தன்னியல்பினுள்ளும், பசுக்களது தன்னியல்பினுள்ளும் யாவராலும் எளிதில் அறியத்தக்கன, முறையே, இயல்பாகவே பாசத்துட்படாது தூய்மையாய் நிற்றலும், இயல்பாகவே பாசத்துட்பட்டு மாசுற்று நிற்றலுமாம். பாசம் இல்லையேல், பிறப்பு இல்லை; பாசம் உண்டேல் பிறப்பு உண்டு. ஆகவே, எங்காயினும், எவ்வாருயினும் பிறப்பினை உறுவது உயிர் என்றும், எங்கும் எவ்வாற்ருனும் பிறப்பு இல்லாதது கடவுள் என்றும் நன்கு உணர்தல் வேண்டும். அங்ஙனம் உணருங்கால், சிவபிரான் ஒருவனே பிறப்பில்லாதவன் என்பதும், ஏனைய எல்லோரும் பிறப்பு உடையரே என்பதும் வெள்ளிடை மலைபோல் அனைவரும் அறிய விளங்கிக் கிடப்பன. ஆதலின், சிவபிரான் ஒருவனே கடவுள் என்பதும், ஏனையோர் பலரும் உயிரினத்தவரே என்பதும் தாமே போதரும். அதனுல், 'சிவபிரானே முதற்கடவுள்; ஏனையோர் முதற்கடவுளர் அல்லர்' என வரை

யறுத்துக் கூறுவோர், பதி பசுக்களது, பிறப்பின்மையும், அஃது உண்மையுமாகிய தன்னியல்பு பற்றிக் கூறுகின்றாரல்லது, சிவன், மால், அயன், இந்திரன் என்பனபோன்ற பெயர்களும், அவர்களுக்குச் சொல்லப்படும் வடிவு தொழில்களும் ஆகிய பொதுவியல்புபற்றியே கூறுகின்றார் அல்லர் என்பது நுண்ணுணர்வுடையோர்க்கு நன்கு விளங்குவதேயாம். எனவே, இங்ஙனம் பல்கோடியினராகிய தேவர் உருத்திரர்கள், சிவர்கள் முதலிய அனைவரது இயல்புகளையும் யாவர்க்கும் முதல்வனாகிய பரமசிவனது இயல்பினையும், ஐயமின்றித் தெளிக. சிவக்கூறு பற்றிக் கூறிவந்த இவை எல்லாம், சத்திக் கூறாய் நிற்கும் தேவியர் அனைவர்க்கும் பொருந்துதல் காண்க.

மாணுக்கன் : மால், அயன் முதலியோருள் ஒருவரையே பிறப்பிறப்பு இல்லாத பதியாகக் கொண்டு வழிபடின் வரும் குற்றம் யாது ?

ஆசிரியர் : அங்ஙனம் கொள்வோர் இதுகாறும் ஒருவரும் இல்லாமையின், அவ்வாறு கொள்வன, புதியனவாகத் தோற்றுவிக்கும் மதங்களாம் அன்றி வேறில்லை. 'இயல்பாகவே பாசங்களின் நீங்கிப் பிறப்பிறப்பில்லாது நிற்கின்ற சிவபிரான், யாவர்க்கும் முழுமுதற் கடவுளாய் விளங்கி, எல்லா நலங்களையும் செய்துவருகின்றான்' என, ஆயிரம் ஆயிரம் நூல்கள் முழங்கவும் அவ்வண்ணமே அளவற்ற திருக்கோயில்களில் அவனை வழிபட்டு அளவற்றோர் அளவிறந்த நன்மைகளை எய்திவரவும், அதனை விடுத்து, நீ கூறுமாறு புதிய மதங்களைத் தோற்றுவிக்க வேண்டிய இன்றியமையாமை என்னை ? யாதொன்றும் இல்லை. ஆகவே, அங்ஙனம் புது மதங்களைத் தோற்றுவிப்பின், அதற்குக் காரணம் கொண்டதனை விடுதற்கு மனமில்லாமையே யன்றி வேறின்மை உணர்க. (தொடரும்)

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Sri Veeratteswaraswami Devasthanam, Korukkai.

தருமபுர ஆதீனம் கோயில்களுக்குண்டான தனிச் சிறப்புற்ற முறையில் நிர்வாகிக்கப்படும். இந்த புண்ணிய க்ஷேத்திரத்தில் மிகவும் நிம்மதியான சூழ்நிலையில் சுவாமி தரிசனம் செய்யும் பாக்கியம் இன்று கிட்டியது. ஓதுவாமூர்த்திகள், சிவாச்சாரியார் இவர்களின் பண்பும் பாண்டித்தியமும் கவர்வனவாக இருந்தன. நல்ல முறையில் நிர்வாகித்து வரும் நிர்வாக அதிகாரியவர்கள் திரு ராமச்சந்திரன் பாராட்டுக்குரியவர்.

(ஒப்பம்). கி. சுப்பிரமணியன்,

30—12—64. தாசில்தார்.

# அப்பய்யதீக்ஷிதரும் சிவபரத்துவமும்

திரு. பெ. திருஞானசம்பந்தம் M. A., L. T.

பூர்வ மீமாம்சை, அத்வைதம், சிவாத்வைதம், சாஹித்யம் முதலான பல சாஸ்திரங்களை இயற்றிய அப்பய்ய தீக்ஷிதர் சுமார் கி. பி. 1600 ஆம் ஆண்டில் வாழ்ந்தவர், 'சிவகர்ணாமிருதம்' என்ற வடமொழி உரை நடை நூலில் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்ற கொள்கையை நியாயங்களை எடுத்துக்காட்டியும், சுருதி, ஸ்மிருதி, இதிஹாஸம், புராணம் ஆகியவற்றினின்றும் மேற்கோள் காட்டியும் நிறுவுகின்றார். அவற்றுள் ஒரு சிலவற்றைக் கீழே தருகிறோம்.

ஒரு சமயம் தேவர்கள் சுவர்க்கத்தை அடைந்து உருத்திரனைக் கண்டு 'தாங்கள் யார்?' என்று வினவ, அவர் 'நானே முதலில் இருந்தேன். இப்போதும் இருக்கிறேன். இனியும் இருப்பேன். என்னினும் வேறான ஒருவன் இல்லை' என்றார். இக்கருத்து அதர்வசிரஸ் உபநிடதத்தில் காணப்படுவது.

தேவா ஹ வை ஸ்வர்கம் லோகமகமம்ஸ்தே தேவா ருத்ரமபிருச்சன் கோ பவானிதி, ஸோப்ரவீதஹமேக: ப்ரதமமாஸம் வர்தாமி, பவிஷ்யாமி ச நான்ய: கஸ்சின்மத்தோ வ்யதிரிக்த இதி.

இவ்வாக்கியத்தோடு 'ஸதேவ ஸோம்ய இதமக்ர ஆஸீத்' என்ற சாந்தோக்ய உபநிடத வாக்கியத்தை இணைத்துப்பார்த்தால் உலகத் தோற்றத்தின் மூலகாரணன் சிவன் என்பது விளங்கும்.

இக்கருத்து சுவேதாசுவதரோபநிடதத்திலும் காணப்படுகிறது.

யதாதமஸ்தந்ந திவா ந சாத்ரிர் ந ஸந்ந சாஸச்சிவ ஏவ கேவல: ததக்ஷரம் தத் ஸவிதுர்வரேண்யம் ப்ரக்ஞா சதஸ்மாத் ப்ரஸ்ருதா புராணீ.

தோற்றத்திற்கு முன்பு பகல் இல்லை, இரவும் இல்லை உளதும் இல்லை, இலதும் இல்லை, நித்தியனாயும் முக்திவேட்கை உடையோரால் விரும்பப்படுகின்றவனாயும் உள்ள சிவன் ஒருவனே இருந்தான். பிரம்மாதிகளால் பெறப்பட்ட ஞான பரம்பரையும் அவனிடத்திருந்தே தோன்றியது.

முண்டகோபநிடதத்திலும் இக்கருத்து வலியுறுத்தப்படுகிறது.

யதா ஸுதீப்தாத் பாவகாத் விஸ்புலிங்கா: ஸஹஸ்ரஸ: ப்ரப வந்தே ஸரூபா;. ததாக்ஷராத் விவிதா: ஸோம்ய பாவா: ப்ரஜாயந்தே தத்ரசைவாபி யந்தி.

எப்படி கனன்று எரிகின்ற தீயினின்றும் ஒரே உருவினதான ஆயிரக்கணக்கான தீப்பொறிகள் தோன்றுகின்றனவோ அப்படி நித்தியனுன பரமேசுவரனிடத்தினின்றும் பல பல தோன்றின, பின்னர் அங்கேயே ஒடுங்கின.

கைவல்யோபநிடதத்தில் 'உமாஸஹாயம் பரமேஸ்வரம் ப்ரபும் த்ரிலோசனம் நீலகண்டம் ப்ரஸாந்தம்' என்று தொடங்கி 'ஜ்ஞாத்வா தம் ம்ருத்யுமத்யேதி நாந்ய: பந்தா விமுக்தயே' என்று முடிகின்ற பகுதியிலும் உமையொருபங்கன், முக்கண்ணன், நீலகண்டன் என்றெல்லாம் போற்றப்படும் பரமேசுவரன் நித்தியன், சுதந்திரன்; அவனே பிரமன், இந்திரன், விஷ்ணு, பிராணன், காலம், அக்னி, சந்திரன், அனைத்துமாகின்ருன். முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாய், பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனுய் உள்ள அவன் பூதங்கள் தோறும் நிற்பவன். அனைத்தையும் அறிபவன். அப்பாலுக்கப்பாலாய் இருப்பவன். அவனைப்பற்றிய பதி ஞானமே முக்தி சாதனம் என்று கூறப்பட்டுள்ளது. 'உமாஸஹாயம்' முதலான அடைமொழிகளால் அவனுடைய அருட்சக்தியும், ஐசுவரியமும், ஆணவத்தை அடக்கும் ஆற்றலும், பரோபகாரத்தன்மையும் உணர்த்தப்படுவதை அறிகிருேம்.

புருஷுசூக்தத்தில் 'ஈஸான;' என்ற சொல் காரண இடுகுறியாக சிவனையே குறிக்குமென்பது 'ஈஸ்வர: ஸர்வ ஈஸான;' 'ஈஸான; சஸிஸேகர;' பசுபதி;' சூலிசங்கர:' என்ற அபிதான கோச வாக்கியங்களால் வலியுறுத்தப்படுகிறது. மேலும், 'நாமாநி தவ கோவிந்த யாநி லோகேமஹாந்திச தாந்யேவ மம நாமாநி நாத்ர கார்யா விசாரண' — 'கோவிந்தா, உமக்கு இவ்வுலகில் எத்தனை பெரும் பெயர்கள் உளவோ அவை எல்லாம் என் பெயர்களே. இதை விசாரிக்கத் தேவை இல்லை' — என்ற ஹரிவம்ச வாக்கியத்தாலும் மேற்கண்ட கூற்று தெளிவுபடுத்தப்படுகிறது.

சிவபரமான சுவேதாசுவதர உபநிடதத்தில் பூய: ஸ ஸ்ருஷ்ட்வா பதயஸ்ததேத: சர்வாதிபத்யம் குருதே மஹாத்மா.

ஸ காரணம் கரணுதிபாதிபோ ந சாஸ்ய கஸ்சித் ஜநிதா ந சாதிப; என்ற மந்திரங்களால் அவனருளால் தோன்றிய இவ்வுலகனைத்திற்கும் அவனே முதற்காரணன், அவனை ஒப்பாரும் மிக்காரும் இல்லை அன்பது அறியப்படுகிறது.

ஒரு சமயம் தேவர்கள் ஒன்றுகூடி ஆத்மவிசாரத்தில் ஈடுபட்டிருந்ததாகவும், உலகத்தோற்றத்திற்குக் காரணம் யாது என அவர்கள் தியானித்துக் கொண்டிருந்தபோது இமவானின் புத்திரியான கௌரீ தோன்றினுள் எனவும், தேவியின் அருளால் மூலகாரணர் சிவனே எனத் தெளித்தனர் எனவும் கூர்மபுராணத்தில் கூறப்பட்டுள்ளது. 'பஸ்யந்தி சம்பும் கவிமீஸிதாரம் ருத்ரம் ப்ருஹந்தம் புருஷம் புராணம்'.

லிங்கபுராணத்தில், உலகத்தோற்றத்திற்கு முன்னர் சிவன் இருந்தார் எனவும், தன் முகத்தினின்றும் தோன்றிய பிரமனை நோக்கி 'சிருட்டித்தொழிலை இங்ஙனம் செய்க எனப் பணித்தருள அவரும் தொடங்கினுர் என்று கூறப்பட்டுள்ளது. 'அவ்யக்தாத் பவத்ஸ்தாணு: சிவ: பரமகாரணம், ஸத்கார்ய கரணோபேத ருஷிர் விச்வாதிக: ப்ரபு:. தேவானும் பிரதமம் தேவம் ஜாயமானம் முகாம்புஜாத். ததர்ச சாக்ரே ப்ரம்ஹாணம் ஆக்ஞயா தமவைக்ஷத, த்ருஷ்டோ ருத்ரேண தேவேச: ஸஸர்ஜ ஸகலம் ஜகத்'.

சிவபுராணத்திலும் பிரம்ம விஷ்ணு ருத்ராதியரும் ஐம்பூதங்களும் இந்திரியங்களும் எந்த ஒருவனிடத்திலிருந்து தோன்றினவோ, எவன் பரமகாரணனே அந்த சர்வேசுவரன் ஆகாச வெளியில் இருக்கும் சம்பு ஆவான். தோற்றமும் ஒடுக்கமும் அவனிடத்தேதான் என்பது விதந்தோதப்படுகிறது.

'யஸ்மாத் ஸர்வமிதம் ப்ரம்ஹவிஷ்ணு ருத்ரேந்த்ரபூர்வகம்,
ஸஹ பூதேந்த்ரியை: ஸர்வை: ப்ரதமம் ஸம்ப்ரஸூயதே,
ஸ ஸர்வைச்வர்ய ஸம்பந்நோ நாம்நா ஸர்வேச்வர: ஸ்வயம்
ஸர்வைர் முமுக்ஷுபிர்த்யேய: சம்புராகாச மத்யக:,
அநேந சித்ரக்ருத்யேந ப்ரதமம் ஸ்ருஜ்யதே ஜகத்,
அந்தகாலே புனச்சேதம் அஸ்மின் பிரளயமேஷ்யதி.

மனுதர்ம சாத்திரத்தில் 'ஏஷ ஸர்வாணி பூதானி பஞ்சபிர் வ்யாப்ய மூர்த்திபி:, ஜன்ம வ்ருத்திக்ஷயைர் நித்யம் ஸம்ஸாரயதி சக்ரவத்' என்று கூறப்படுவதாலும், 'மூர்த்தயஸ்தஸ்ய விக்யாதா: பஞ்ச ப்ரம்ஹாஹ்வயா: பரா:, ஸர்வலோக சரண்யஸ்ய சிவஸ்ய

பரமாத்மன:' என்று புராணங்களில் கூறப்படுவதாலும் அஷ்ட மூர்த்திகளின் உள்ளீடாக அனைத்திலும் வியாபித்து நிற்கும் இறைவன் சிவன் என்பது பெறப்படுகிறது.

யோக யாக்ஞ்யவல்கியத்தில் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், சதாசிவன் என்று படிப்படியாக தாரணைசெய்து இறுதியாக பரமசிவனை முகூர்த்தநேரம் சிந்தித்தால் முக்திபெறலாம் என்று கூறப்படுவதால் பிரம்மா முதலானோர் தத்தம் காரணத்தில் ஒடுங்க இறுதியாக நிற்பவர் சர்வகாரணனான பரமசிவன் என்பது தெளிவாகிறது. 'உமார்ததேஹம் வரதம் ஸர்வ காரண காரணம், சிந்தயன் சித்தவிந்யஸ்தம் முஹூர்தமபிதார யேத், ஸ ஏவ முக்த இத்யுக்தஸ்தாந்த்ரிகேஷ்வபி சிக்ஷிதை:'

மகாபாரத சாந்திபர்வத்தில் மகேசுவரன் ஒருவனே அனைத்திற்கும் காரணன் என்றும், விஷ்ணு, பிரம்மா, சந்திரன், சூர்யன் முதலாய அனைவரும் அவனாலேயே தோற்றுவிக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வருகின்றனர் என்றும் பின்வரும் சுலோகங்களில் கூறப்பட்டுள்ளது.

'ஈச்வர: சேதன: கர்த்தா புருஷ: காரணம் சிவ:, விஷ்ணுர் பிரம்மா சசீ ஸூர்ய: சக்ரோ தேவாஸ்ச ஸாந்வயா:, ஸ்ருஜ்யதே க்ரஸ்யதே சைவ தமோபூதமிதம் யதா, அப்ரக்ஞாதம் ஜகத் ஸர்வம் ததாஹ்யேகோ மஹேச்வர:

அநுசாஸன பர்வத்திலும் 'எல்லா தத்துவங்களுக்கும்மேலான ஈசனின் வலப்பக்கத்திலிருந்து பிரம்மாவும் இடப்பக்கத்திலிருந்து விஷ்ணுவும் தோன்றினர் என்று கூறப்பட்டுள்ளது.

'ஸ ஏஷ பகவானீச; ஸர்வதத்வாதிரவ்யய:, ஸர்வதத்வ விதானக்ஞ: ப்ரதான புருஷேச்வர:, ஸோஸ்ருஜத் தக்ஷிணாங்காத் ப்ரம்ஹாணம் லோகஸம்பவம், வாமபார்ச்வாத் ததா விஷ்ணும் லோகரக்ஷார்த்தம் ஈச்வர: யுகாந்தே சைவ ஸம்ப்ராப்தே ருத்ரம் ப்ரபுரதாஸ்ருஜத்.

கிருஷ்ணன் அர்ஜுனனிடத்தில் கீழ்க்கண்டவாறு கூறியதாக கூர்மபுராணத்தில் கூறப்படுகிறது 'ஈசுவரனைப்பற்றிய ஞானத்தை முற்றும் உணர்ந்துவிட்டாய். இனி சோகத்தை விட்டு எல்லோருக்கும் அடைக்கலம் தருபவனான சிவனிடம் சரணடைந்து மேலான பக்தியுடன் வழிபடுவாயாக.'

'ஞானம் ததைச்வரம் திவ்யம் யதாவத் விதிதம் த்வயா,
ஸ்வயமேவ ஹ்ருஷீகேச: ப்ரீத்யோவாச ஸநாதன:,
கச்ச கச்ச ஸ்வகம் ஸ்தானம் ந சோகம் கர்த்துமர்ஹஸி,
பஜஸ்வ பரயா பக்த்யா சரண்யம் சரணம் சிவம்.

வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் யாவும், அனைத்திற்கும் காரணன் உமையொருபங்கனாகிய சிவனே, பிரம்ம விஷ்ணு ருத்ரர்கள் அல்ல என்று கூறுவனவாக பராசரபுராணம் பகர்கின்றது.

'ஸர்வகாரணமீசான: ஸாம்ப: ஸத்யாதிலக்ஷண:,
ந விஷ்ணுர் ந விரிஞ்சிஸ்ச ந ருத்ரோ நாபர: புமான்.
ஸ்ருதயஃஸ்ச புராணானி பாரதாதீனி ஸத்தம,
சிவமேவ ஸதா ஸாம்பம் ஹ்ருதி க்ருத்வா ப்ருவந்தி ஹி.

இதுகாறும் கூறியவாற்றான் எல்லாவற்றிற்கும் காரணனாயும், அனைத்தையும் அதிட்டித்து நிற்பவனாயும், வேறெவராலும் ஆளப்படாதவனாயும் உள்ளவன் பரசிவம் என்பதும், வேதங்கள், ஸ்மிருதிகள், இதிகாசங்கள், புராணங்கள் இவற்றுள் முக்தி நிலையை அடையவேண்டுவோர் உபாசிக்கத்தக்க தெய்வம் சதாசிவமே என்பதும் 'சிவகர்ணாமிர்தத்தில்' அப்பய்ய தீக்ஷிதரால் எடுத்துக்கூறப்பட்ட சித்தாந்தச் சுருக்கத்தின் ஒருசில பகுதிகளின் வாயிலாக ஈண்டு எடுத்துக்காட்டப்பட்டது.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswami Devasthanam, Thirubuvanam.

திருபுவனம் கோயிலுக்குள் நுழைந்தவுடன் இது தருமபுரம் ஆதீன கோயிலா என்று கேட்டேன். அதற்குக் காரணம் கோயில் அவ்வளவு தூய்மையாக வைக்கப்பெற்றிருந்ததேயாகும். இத்தகைய தனிச்சிறப்பு தருமபுரம் ஆதீனக் கோயில்களிலெல்லாம் நான் கண்டிருக்கின்றேன். கோயில் நிர்வாகிகள் அன்புடன் வரவேற்று சுவாமி தரிசனம் செய்து வைத்ததுடன் கோயிலில்காணப்படும் கலைச்செல்வங்களையும் காட்டி விளக்கமுங் கூறினர். இத்தகைய சிற்பக்கலை நிறைந்தகோயில் ஒன்று இங்கு இருப்பதை நான் இன்றுதான் கண்டேன். தமிழ் மக்களின் பண்டைய கலைத்திறனை வெளிநாட்டார் அறிந்து கொள்ள வேண்டுமென்றால் இவ்வொரு கோயிலைப் பார்வையிட்டால் போதும். அவ்வளவு அற்புதமான வேலைப்பாடுகள் இங்கு இருப்பதைக் கண்டேன். முழுவதையும் பார்த்து அனுபவிக்கக் குறைந்தது ஒருவாரமாவது வேண்டும். பழைய சிற்பங்கள் பல கோயில்களில் இருந்தாலும் இதைப்போன்று பாதுகாக்கப்பட்ட கோயில் வேறு இருப்பதாகத் தெரியவில்லை. இதைக் கண்போல் பாதுகாத்து வரும் ஆதீனத்தார்களுக்கு நான் நன்றியுடன் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

14—12—64. (Sd.) கி. பழநியப்பன், மதுரை.

ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர் கோயில்
திருப்பணிகுழு உறுப்பினர்.

# சிவாகமத் தெளிவு

## ஆகமப் பொருள்

**நான்கு பாதங்கள் :**

வேதம், மக்கள் அனுசரிக்க வேண்டிய மார்க்கங்களை மூன்ருகக் கூறுகிறது. ஆகமம், அதை நான்காகக் கூறுகிறது. கர்மம், உபாசனை, ஞானம் - இவை வேதம் கூறும் மார்க்கங்கள். சரியை, கிரியை, யோகம், ஞானம் - இவை ஆகமம் கூறும் மார்க்கங்கள். வேதத்தில் கர்மம் முதலிய மூன்றையும் கூறும் பகுதிகள் கர்மகாண்டம் முதலிய காண்டங்களாகச் சொல்லப்படும். ஆகமத்தில் சரியை முதலிய நான்கையும் கூறும் பகுதிகள், சரியாபாதம் முதலிய பாதங்களாகச் சொல்லப்படும்.

பொது நூலாகிய வேதம் கர்மத்தைப் பல தெய்வங்களைக் குறித்துச் செய்யும் முறையிலும், ஞானத்தை, 'பிரம்ம ஞானம், என்ற வகையிலும் பொதுவாகவே கூறுகின்றது. சிறப்பு நூலாகிய ஆகமம், சிவபெருமான் ஒருவரையே குறிப்பிட்டு, அவருக்குச் செய்யும் பலவகையான பணிகளையே சரியை முதலிய மூன்ருகவும், சிவபெருமான் ஒருவரையே பரம்பொருளாக அறியும் சிவஞானத்தையே ஞானமாகவும் கூறுகிறது. அதனுல், சிவாகம ஞானத்தின் பரமப் பிரயோசனம், சிவனை அடைவதேயாகும்.

ஞானம் ஒன்றினுலேயே சிவனை அடைய முடியும். ஆனுல் அந்த ஞானத்தை, சரியை கிரியை, யோகங்களால்தான் சோபானக் கிரமமாக அடையலாம். ஆகவே, சிவபெருமானை அடைய, சரியை முதலிய மூன்றும் பாரம்பரிய சாதனமாயும், ஞானம் சாட்சாத் சாதனமாயும் இருக்கின்றன. இதனுல்தான் சிவாகமம் நான்கு பாதங்களைக் கூறுவதாய் அமைந்துள்ளது. திருமூலர் திருமந்திரமும் இந்த நான்கு பாதங்களைக் கூறுவது என்பதைச் சேக்கிழார்,

"ஊனுடம்பில் பிறவிவிடம் தீர்ந்துலகத் தோர்உய்ய
ஞானமுதல் நான்கும்மலர் நற்றிருமந் திரமாலை
பான்மைமுறை ஓர்ஆண்டுக் கொன்றுகப் பரம்பொருளாம்
ஏனஎயி றணிந்தாரை, "ஒன்றவன்றான்" எனஎடுத்து"

"முன்னிய அப்பொருள்மாலைத் தமிழ்மூவா யிரம்சாத்தி
மன்னியமூ வாயிரத்தாண் டிப்புவிமேல் மகிழ்ந்திருந்து
சென்னிமதி அணிந்தார்தம் திருவருளால் திருக்கயிலை
தன்னிலணைந் தொருகாலும் பிரியாமைத் தாளடைந்தார்"

என்று விளக்கியுள்ளார். இன்னும், அவர் தில்லைவாழ் அந்தணர்களைக் குறிப்பிடும் இடத்தில், "ஞானமே முதலா நான்கும் நவையறத் தெரிந்து மிக்கார்" என்று குறிப்பிடுகின்றார். இதனால், பொது நூலாகிய வேத மார்க்கத்துடன் நில்லாமல், சிறப்பு நூலாகிய சிவாகம மார்க்கத்தில் நிற்றல் அவசியம் என்று தெரியவருகின்றது,

தீக்ஷை :

சிவாகம மார்க்கத்தில் செல்வதற்கு முதலாவது, சிவ தீக்ஷை பெறுதல் வேண்டும்.

दीयते ज्ञानसद्भावः क्षीयते च मलत्रयम् ।
दीयते क्षीयते चेति दीक्षाशब्दो द्विधोच्यते ॥

மலத்தை நாசம்செய்து ஞானத்தை யளிப்பதால் தீக்ஷை என்று கூறப்படுகிறது. 'சமயம். விசேஷம், நிர்வாணம்' என்று தீக்ஷை மூன்று. அவற்றிற்குமேல் பெறத்தக்கது ஆசாரியாபிஷேகம். அது எல்லாரும் பெறக்கூடியது அல்ல; நித்தியம், நைமித்திகம், காம்யம் முதலிய எல்லா வகை ஆசாரங்களையும் சிறிதும் குறையாது அனுஷ்டிக்கும் சக்தி யுடையவர்களாய், வேத சிவாகமங்களை நன்றாக ஓதி யுணர்ந்து, அம்முறையிலே நித்திய நைமித்திகாதி கர்மங்களைச் சரியாக அனுஷ்டித்து, மற்றவர்களையும் அவ்வாறு அனுஷ்டிக்கச் செய்பவர்களுக்கே ஆசாரியாபிஷேகம் உரியதாகும். சமயம் முதலிய மற்றைய மூன்று தீக்ஷைகளை அவைகளில் விருப்பம் உடைய பக்குவர்கள் அனைவரும் பெறலாம்.

காயத்திரி மந்திரத்தை ஜெபித்தல், வேதம் ஓதல் முதலிய வைதிக கர்மங்களைச் செய்வதற்கு உபநயனம் ஆன பிறகுதான்

உரிமையுண்டு. அதுபோலவே, ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜெபித்தல், சிவாகமங்களை ஓதுதல் முதலிய சைவாசாரங்களை அனுஷ்டிப்பதற்கு, சிவதீக்ஷைபெற்ற பிறகுதான் உரிமையுண்டு.

शुद्धशैवमिदं तस्मम् न देयं न प्रकाशयेत् ।
दीक्षितस्य तु धरस्य शिवभक्तिपरस्य च ।
श्रावणीयं न चान्यत्र कथनम् हि प्रशस्यते ॥

— சுப்ரபேதம்.

இந்தச் சுத்த சைவாகமம் எல்லார்க்கும் கொடுக்கத்தக்கது மன்று; விளக்கத்தக்கதுமன்று; தீக்ஷைபெற்றவனாய், நிலையுடையோனாய்ச் சிவபத்திமானாய் இருப்பவனுக்கே விளக்கத் தக்கது; ஏனையோர்க்கு விளக்கல் குற்றமாம் என்று சொல்லப் பட்டது.

உபநயனம் செய்யப்பெறாத வைதிகர் வைதிகராவதில்லை. அதுபோலவே, சிவதீக்ஷை பெறாத சைவர் சைவராகமாட்டார். அதனால், முதல் தீக்ஷையாகிய சமய தீக்ஷை பெற்ற பின்பே ஒருவர், 'சைவர்' என்று சொல்லுதற்குத் தகுதியுடையவ ராகின்றார்.

'வேதம் மூன்று வருணத்திற்கு மட்டும் உரியது; ஆகமம் நான்கு வருணத்தார்க்கும் உரியது' என்று முன்பே சொல்லப்பட்டது. ஆகையால், உபநயனத்தை முதல் மூன்று வருணத்தார் மட்டுமே பெறலாம். ஆசாரியாபிஷேகம் தவிர மற்ற மூன்று சிவதீட்சையை நான்கு வருணத்துள் எல்லோரும் பெறலாம்.

நான்கு வருணத்தார்களில் சிவப்பிராமணர்கள் ஆதிசைவ ராவர். வைதிகப் பிராமணர்கள் சிவதீக்ஷை பெற்றால், 'மகாசைவர்' என்று அழைக்கப்படுவார்கள். மற்றவர்கள் சிவ தீக்ஷைபெற்றால், 'அநுசைவர்' முதலிய பேதங்களாகச் சொல்லப்படுவர்.

சமய தீக்ஷை பெற்றபின்பே சரியா பாதமாகிய முதற்படியில் நிற்றல் கூடும். விசேஷ தீக்ஷைபெற்ற பின்பு கிரியையும், யோக மும் செய்யலாம். ஞானம் நிர்வாண தீக்ஷையாற் கிடைக்கும்.

चाक्षुषी स्पार्शनी दीक्षा वाचिकी मानसी तथा ।
शास्त्री च योगदीक्षा च हौत्रीत्यादि रनेकधा ॥

'சமயம், விசேஷம், நிர்வாணம்' என்ற வகையில் செய்யப்படும் தீக்ஷைகள் சக்ஷு தீக்ஷை, ஸ்பரிச தீக்ஷை, வாசக தீக்ஷை, மானச தீக்ஷை, சாஸ்திர தீக்ஷை, யோக தீக்ஷை, ஔத்ரி தீக்ஷை முதலிய பலவகைகளால் செய்யப்படும். அவைகளையெல்லாம், ஞானவதியாகவும் செய்யலாம்; கிரியாவதியாகவும் செய்யலாம்.

சக்ஷு தீக்ஷை :— அதாவது கண்ணால் பார்த்தல், பார்வை அநுக்ரஹமென்றும் நிக்ரஹமென்றும் அவ்விரண்டுமின்றிப் பொதுவான அழகென்றும் மூன்று வகைப்படும். அவற்றுள், அநுக்ரஹமான பார்வையே சக்ஷுதீக்ஷை எனப்படும். அதாவது இறைவனிடத்தில் சித்தத்தை வைத்து, அச் சித்தவிருத்தியோடு கூட மாணாக்கனுடைய பந்தம் நீங்கும்படி பார்த்தல்.

ஸ்பரிச தீக்ஷை :— ஆசாரியன் தனது வலதுகையில் சிவபெருமானைப் பாவனைசெய்து பூஜித்து அக் கையால் மாணாக்கன் தலையைப் பரிசித்து அதாவது கையைத் தலைமேல் வைத்துப் பாசம் நீங்கும்படி செய்தல்.

வாசக தீக்ஷை :- மாணாக்கனுடைய வருணத்திற்கும் ஆச்சிரமத்திற்கும் ஏற்றவாறு பஞ்சாக்ஷர மந்திரத்தை உபதேசித்தல்.

மானச தீக்ஷை :— ஆசாரியன் தன்னுடைய யோகப்பயிற்சியினால் மாணாக்கனுடைய ஹ்ருதயத்தில் பிரவேசித்து, அம்மாணாக்கன் அறிவில் சிவமாந்தன்மை விளங்கும்படி செய்தல்.

சாஸ்திர தீக்ஷை :— ஞானசாஸ்திரப் பொருளை எல்லாம் தொகுத்துப் பதி, பசு, பாசங்களுடைய இலக்கணங்களையும், சிவ ஜீவர்களுடைய ஐக்கியத்தையும் நூல்வழியாகப் போதித்தல்.

யோகதீக்ஷை :— சிவயோகத்தை அப்பியாசம் செய்யும்படி உபதேசித்தல்.

ஔத்திரி :— ஹோமத்தோடுகூடச் செய்யும் தீக்ஷை. இந்த ஔத்ரீ தீக்ஷையானது ஞானவதி கிரியாவதி என இருவகைப்படும். இவ்வாறுள்ள இவ்விரண்டும் நிர்பீஜ தீக்ஷை, சபீஜ தீக்ஷை என வெவ்வேறிருவகைப்படும். அவற்றுள், நிர்பீஜ தீக்ஷையாவது மலபரிபாகமுடையவராய வழியும் தீக்ஷைக்குப் பின் ஒருதலையான் வழுவின்றி அனுஷ்டிக்கக் கடவனவாகிய சமயாசாரங்களை அனுஷ்டிக்கும் ஆற்றலும் அறிவும் இலராயினருக்கு மற்ற கருமங்களோடுகூடச் சமயாசாரத்தையும் ஆகுதியாற்

சுத்திசெய்து ஒழித்து நித்தியகரும மாத்திரையில் இயன்ற மட்டும் அதிகாரமுடையவராகச் செய்தலாம். ஆயினும் சமயாசாரங்களைச் சுத்திசெய்தொழித்தமையின் நைமித்திகத்தினும் காமியத்தினும் அதிகாரம் கெடாமையால் இது நிரதிகாரதீக்ஷை எனப் பெயர்பெறும். சமயம் விசேஷம் நிர்வாணம் என்ற மூவகைத் தீக்ஷைகளில் சமயமும், விசேஷமும் ஒவ்வொன்றேயாம். நிர்வாண தீக்ஷை அசத்யோ நிர்வாணம் என்றும், சத்யோ நிர்வாணம் என்றும் இருவகைப்படும்.

அசத்யோநிர்வாணம், தேஹாந்தத்தில் முத்தியைப் பயப்பது. சத்யோநிர்வாணம் என்பது, அப்பொழுதே முத்தியைக் கொடுப்பது.

சமயாசார சுத்தியோடு செய்யப்படும் நிர்வாணதீக்ஷையும், அதற்கு அங்கமாயும் சுவதந்திரமாயும் செய்யப்படும் சமய விசேஷங்களும் நிர்பீஜதீக்ஷையாகும்.

சபீஜ தீக்ஷையாவது மலபரிபாகத்தோடுகூடக் கற்றறிவும் ஆற்றலும் மிக்குடையராயினுருக்குச் சமயாசார கன்ம மாத்திரம் நிறுத்தி மற்றைக்கன்மமெல்லாம் சுத்திசெய்தொழித்து, நித்திய கன்ம முதலிய மூன்றினும் பேரதிகாரமுடையவராகச் செய்வதாம், ஆதலில் இது சாதிகாரதீக்ஷை எனப் பெயர் பெறும். இத்தீக்ஷைப் பேறுடையார் தீக்ஷை வேறுபாட்டால் சாதகரும், ஆசாரியருமென இருதிறப்படுவர். இந்த சபீஜதீக்ஷைதான் லோகதருமிணி, சிவதருமிணி என்று இருவகைப்படும். லோகதருமிணியாவது போககாமிகட்குத் திரோதான சத்திரூபமாகிய சிகாச்சேதமின்றிச் செய்வது, சிவதருமிணியாவது முத்திகாமிகளுக்குத் திரோதான ரூபமாகிய சிகாச்சேதத்தோடு செய்வது. சமயாசார சுத்தியின்றிச் செய்யப்படும் நிருவாண தீக்ஷையும், அதற்கு அங்கமாய்ச் செய்யப்படும் சமய விசேஷங்களும் சபீஜ தீக்ஷையாகும்.

दीक्षैव मोचयेत्पाशान् என்று கூறப்படுவதால். தீக்ஷையே பாசத்தைப்போக்கி, முத்தியளிக்கவல்லதாகவுள்ளது. அதனல், மேற்கூறிய தீக்ஷைகளில் அவரவர்களுக்கு உரிய தீக்ஷைகளை இயன்ற அளவில் பெற்று, அவற்றிற்கு ஏற்ற சமய ஆசாரங்களை அனுஷ்டித்தல் ஒவ்வொரு சைவருக்கும் இன்றியமையாக் கடமையாகும்.

(தொடரும்)

# மகோதய புண்ணிய காலம்

மகோதயம், அர்த்தோயம் என்னும் புண்ணிய காலங்கள் பல ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் சிறப்புமிக்க நாட்களாகும். இந்தப் புண்ணியகாலம் இவ்வாண்டு தைமாதம் 19ம் தேதி (1—2—65) கூடியது. சோமவாரம், அமாவாசைத்திதி, திருவோண நட்சத்திரம், வியதீபாத யோகம் கூடி வருவது 'மகோதயம்' எனப்பெறும். கோடி சூரியகிரண புண்ணிய காலத்துக்கு ஒப்பானது.

இப்புனித நாளில் கங்காசாகர சங்கமம், காவிரிசாகர சங்கமம், கோடிக்கரை, தனுஷ்கோடி முதலிய இடங்களில், அல்லது கடலுடன் புண்ணிய நதிகள் சங்கமம் ஆகும் இடங்கள். புண்ணிய தீர்த்தங்கள் இவற்றில் ஸ்நானம், பிதிருக்காரியங்கள், கோதானங்கள் முதலிய தானங்கள் செய்தால் மாசு நீங்கப் பெற்று, விசேஷமான புண்ணிய பலன்களை அடைகிறார்கள் என்று மகாபாரதம், ஸ்மிருதி முதலிய நூல்கள் கூறுகின்றன.

## விதிகள்

வியதீபாதத்தின் நான்காம் பாதமும், அமாவாசையின் முதற் பாதமும், திருவோண நட்சத்திரத்தின் நடுப்பாகமும் ஞாயிற்றுக்கிழமையின் உதயகாலத்தில் கூடியிருந்தால், அர்த்தோய புண்ணியகாலம்; இவை திங்கட்கிழமை உதயகாலத்தில் கூடியிருந்தால் மகோதய புண்ணியகாலம் ஆகும்.

— மகாபாரதம்.

ஞாயிற்றுக்கிழமை அமாவாசை, திருவோண நட்சத்திரம், வியதீபாத யோகம் பகலில் சேர்ந்திருந்தால் அர்த்தோதயம்; இவை திங்கட்கிழமை பகலில் சேர்ந்தால் மகோதயம். இவை இரவில் சேர்ந்தால் புண்ணிய காலமில்லை.

— ஸ்மிருதி சங்கிரகசாரம்.

இவ்விதிகளைக்கொண்டு பரிசீலனைசெய்து, திதி வார நட்சத்திரங்கள் சேர்க்கை பகலில் இருந்தாலே இந்தப் புண்ணிய காலங்களாகக் கருதலாம் என்று வைத்தியநாத தீட்சிதரவர்கள் சித்தாந்தம் செய்திருக்கிறார்கள்.

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur.

I had the good fortune of having worship at the Sri Amirthagateswaraswamy temple with some of my friends this day Though this visit was not prearranged and was sudden, I found the temple staff very helpful, very courtous and they took us round the various shrines and explained to us the significance and importance of this holy place, Thirukkadaiyur I had been visiting this temple often. Needless to say that this is one of the best kept temples in South India. Anyone will be impressed by the management and upkeep of all the temples under Dharmapuram Adhinam The mere entry into the temple is so very inspiring and it instils on us Godliness.

(Sd.) A. Ramachandran,
Advocate,
(Govt. Pleader, Nagapattinam)

28—12—64

---

### Sri Kambahareswaraswami Devasthanam, Tirubuvanam.

I have just come from seeing Thirukadayur and Thiruvengadu Temples I must say that I have again seen another beautiful temple.

The Dharmapuram Adhinam has to be congratulated on the excellent way they maintain these temples which make them ideal as places of worship.

(Sd.) R Ganapathy
S/o. Sri K. Rajah Iyer, Madras.

1—1—65.

We visited this well maintained shrine of heavy traditions this evening It is an unusual temple where we could worship Lord Siva and Lord Vishnu together in a complementary avatar.

(Sd.) C. S. Ramachandran, I. C. S.
Managing Director,
Central Warehousing Corporation
Ministry of Food, New Delhi.

An adorable sight of Indian treasure.

19—1—65. (Sd.) Janaki Ramachandran.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன ஸ்தாபனங்கள் சார்பில்
வள்ளலார் கோயில் ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி திருக்கோயிலில் நிகழ்ந்த பாவைமாநாடு



திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச்சொந்தமான
திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்
பாவை மாநாடு



ஞ்சை அறநிலையத்துணை ஆணையர் திரு. A. மார்க்கண்டவேல்ராஜ்
அவர்கள் தலைமையில்
திருவாசகமணி, திரு. K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L.,
அவர்கள் சொற்பெருக்காற்றுதல்.

# செய்திகள்

## பூம்புகாரில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்

இறைவன் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றுமாய் விளங்குகின்றான். இம் மூன்றையும் வழிபட்டார்க்கு எல்லா நலன்களும் விளையும் என்பது நம் சமய மரபு.

தை அமாவாசையும், திங்கட்கிழமையும், திருவோண நக்ஷத்திரமும், வியதீபாத யோகமும் கூடிய சூரியோதய புண்ணிய காலம் மகோதயம் எனப்படும். இந்தப் புண்ணிய காலத்தில் புண்ணிய நதிகள் சங்கமமாகின்ற இடங்களிலும் வேதாரண்யம் தனுஷ்கோடி போன்ற புண்ணியத் துறைகளிலும் சமுத்திரஸ்நானம் செய்தல் பெரும் பயனைத் தரும். இந்த ஆண்டு 1—2—65 தை அமாவாசை மகோதய புண்ணிய காலமாய் அமைந்தது.

மகோதயச் சிறப்புப் பற்றிய துண்டுப் பிரசுரங்கள் ஆயிரக்கணக்கில் அச்சிடப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் ஆதீனப் பணியாளர் அனைவர்க்கும் புத்தாடைகள் வழங்கியருளினார்கள்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இப்புண்ணிய காலத்தில் அன்பர்கள் புடைசூழ காவிரி சங்கமமாகின்ற காவிரிப்பூம்பட்டினத்தில் புண்ணிய தீர்த்தமாடினார்கள் நூற்றுக்கணக்கானவர்களுக்கு வஸ்திரதானமும், பிறதானங்களும் வழங்கியருளினார்கள். சாயாவனம் திருக்கோயிலுக்குக் கோதானம் செய்தருளினார்கள். பல்லவனீச்சரத்தில் உள்ள சத்திரத்தில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் செய்யப்பட்டது.

## வேதாரண்யத்தில் தருமையாதீனச் சார்பில் அன்னம்பாலிப்பும் சமயப் பிரசாரமும்

வேதங்கள் பூசித்ததும், சப்த விடங்கத் தலங்களில் ஒன்றானதும், மறைகள் வழிபட்டு அடைத்துச் சென்ற திருக்கதவினைத்

சமயக்கூட்டத்தில் தஞ்சை மாவட்டத் தண்டல்நாயகம் ஸ்ரீ வேதநாராயணன் அவர்கள் கலந்துகொண்டார்கள்.

இவ்விழாவுக்கு அறநிலையத் துணை ஆணையரவர்கள் உத்தரவுக்கிணங்க பல ஆலய நிர்வாக அதிகாரிகள் இலாகா ஆய்வர்கள் முதலியோர் வந்து தொண்டாற்றினர். இத் தொண்டினைப் பாராட்டி ஊர்ப்பெருமக்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

மறுநாள், 2—2—65 அன்று காலை 10 மணிக்குத் துணை ஆணையவரவர்கள் ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்கள், பணியாளர்கள், ஆலய நிர்வாகிகள், இலாகா ஆய்வர்கள் முதலியோர் இந்த விழாவில் மனப்பூர்வமாக ஈடுபட்டுத் தொண்டாற்றியதற்குத் தாம் பெருமைப்படுவதாகவும் பாராட்டுவதாகவும் இதுபோன்ற பணிகளில் இறைபணியாளர்கள் அடிக்கடி ஒன்றுபட்டு ஈடுபடுதல் வேண்டுமென்றும் மொழிந்தார்கள்.

ஆதீனச் சமயப்பிரசாரத்தினருக்கு மறைக்காடு கஸ்தூரிபா கன்யா குருகுலத்தில் ஒரு வரவேற்பு நடைபெற்றது. அதில் நிர்வாகக்குழுத் தலைவர் திரு. கே. சுப்பையா பிள்ளையவர்கள் வரவேற்றுப்பேசினர் அந் நிலையத்தில் அண்ணனுக விளங்கும் திரு. அப்பாக்குட்டி வழிமொழிந்தார்கள். துணை ஆணையர் அறவுரை வழங்கி ஆதீனப் பணிகளைப் பாராட்டிப் பேசினுர்கள் நாம பஜனை நடத்தினுர்கள். சமயப் பிரசார நிலையம் வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தெய்வவழிபாடு அடியார்கள் பெரியோர்கள் வழிபாடு, அவர்கள் சொல்வழி நிற்பதன் பெருமை, நமது பண்பாடுகளின் சிறப்பு முதலியவை பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் ஆசியை எடுத்துரைத்தார்கள். திருவாரூர் இராஜன் கட்டளை கட்டளை விசாரணை, வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் பெண்கல்வியின் வளர்ச்சி அதனுல் விளையும் நாட்டுயர்வு இவற்றை நமது அடியார் பெருமக்களாகிய அம்மையார்கள் முன் நிகழ்த்திய பணிகளைக்கொண்டு விளக்கினுர்கள். அக் குருகுலத் தலைமை ஆசிரியை நன்றி கூறக்கூட்டம் இனிது முடிந்தது. திரு. அப்பாக்குட்டி அவர்கள் நன்றிவிருந்தொன்று நடத்தினுர்கள்.

2—2—65 காலை நீராடி திருக்கோயில் வழிபாடுகளை முறையே முடித்துக்கொண்டு மாலை 5 மணிக்குப் புறப்பட்டுத் திருவாரூர் வந்து ஸ்ரீ தியாகராஜப்பெருமானை வழிபட்டுக் கொண்டு இரவு 11 மணிக்கு அனைவரும் தருமை வந்து சேர்ந்தனர். வேதாரண்யத்தில் திருக்கோயில் நிர்வாகிகள் அனைவரும் ஆதீனப் பணிக்குப் பெரிதும் உதவியளித்தது போற்றற்குரியது.

## வேளூரில் பாவை மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 8, 9, 10—1—65 ஆகிய நாட்களில் பாவை மாநாடு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் அருளால் சிறப்புடன் நிகழ்ந்தது. 8—1—65 வெள்ளிக்கிழமை 6 மணிமுதல், திருவாசகமணி, திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., மாநாட்டைத் தொடங்கிவைத்து, திருவாசகம் என்னும் தலைப்பிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர், வித்துவான் திரு. வீ. உலகவூழியர் " என்புருக்கி " என்ற தலைப்பிலும், தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பொறுப்பு முதல்வர் திருநெறிச் செம்மல் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் " ஏதவனைப் பாடும் பரிசு " என்னும் தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். அடுத்து கும்பகோணம் ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபையினரால் " மார்க்கண்டேயர் " வரலாறு பொம்மலாட்டமாக நிகழ்ந்தது.

9—1—65 சனிக்கிழமை மாலை அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மொழியியல்துறை, செஞ்சொற்கொண்டல் வித்துவான் திரு, சொ. சிங்காரவேலன் எம். ஏ., " முன்னைப் பழம்பொருள் ', என்னும் பொருளிலும், திருவையாறு கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர், வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார்' " போற்றியருளுக " என்னும் பொருளிலும், தருமையாதீனம் சிரோமணி, திரு. சபேசன் " திருப்பள்ளியெழுச்சி என்ற பொருளிலும், சொற்பொழிவாற்றினர். பின்னர், தஞ்சை, திருமதி. டி. ஆர், கமலாமூர்த்தி குழுவினரால் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்ற கதாகாலட்சேபம் நிகழ்த்தப்பெற்றது.

10—1—65 ஞாயிற்றுக்கிழமை அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழாராய்ச்சித்துறைத் தலைவர் வித்துவான். திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., பி. எல். " திருவெம்பாவை என்னும் பொருள்பற்றியும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழாராய்ச்சித்துறைத் துணைப்பேராசிரியர். வித்துவான், திரு. க. வெள்ளைவாரணனார் " உங்கையிற் பிள்ளை " என்ற பொருள் பற்றியும். சீகாழி திரு. கே. சுப்பிரமணிய அய்யர். " பாவை நோன்பு " என்ற பொருள்பற்றியும் பேசினர். பின்னர், நாகப் பட்டினம் தேசிய உயர்பள்ளித் தமிழாசிரியர், தருமையாதீனத் தமிழ்புலவர், வித்துவான். திரு. மு. சண்முக தேசிகர் குழுவினரால் " மாணிக்கவாசகர் " வரலாறு கதாகாலக்ஷேபமாகச் செய்யப்பட்டது. அன்பர்கள் பலர் வந்திருந்து கேட்டு மகிழ்ந்தனர். இரவு பண்ணிசைப் பாரயணத்துடன் திருமுறைத் திருவீதியுலா சிறப்பாக நிகழ்ந்தது.

# எதிர்காலம் - திரு. கே. முத்துஜோதிடர்

(குரோதிஹூ மாசிமீ 1௳ முதல் 30௳ முடிய)

(12—2—65 முதல் 13—3—65 முடிய)

**1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$**

அசுவதி நக்ஷத்திரம் நான்கு பாதங்களும் சுபசோபனுதி மங்களகாரியங்களேயும், ஜீவன லாபத்தையும் தரும். பரணி நான்கு பாதங்களும் கார்த்திகை முதல் பாதமும் மிச்ரபலனேத் தரும். வரவு செலவு சமனுகும். குடும்பத் தொல்லேகளேயும் வீண் அலேச்சல்களேயும் தரும். புதன், வியாழன் சுபமாகும்.

**2. ரிஷபம். கார்த்திகை $\frac{3}{4}$ - ரோஹிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$**

ரிஷபராசி 9 பாதங்களும், தனதான்ய விருத்தியைத்தரும். நஷ்ட தனங்கள் தாளுக வந்துசேரும். மேற்படி ராசிக்காரர்கள் செய்யும் சகல காரியங்களும் வெற்றியடையும். சிநேகிதர்கள் மூலமாய் நன்மதிப்பும், உலகப் பிரசித்தியும் உண்டுபண்ணும். வியாழன், சனி சுபமாகும்.

**3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$**

மிதுனராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். புத்திராதிகளாலும் மித்திரர்களாலும் நன் மதிப்பும் கீர்த்தியும் கிடைக்கும். தானதர்ம பலன்களும் பரோபகார சிந்தனேயும் விருத்தியாகும். குடும்பம் ஓங்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

**4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$ - பூசம் - ஆயில்யம்.**

கடகராசி 9 பாதங்களும் வம்ச விருத்தியைத் தரும். தன தான்யவிருத்தி ஏற்படும். சத்ருக்கள் சரண் அடைவார்கள். அசாத்யமெல்லாம் சுலப சாத்தியமாகும். தெய்வபலம் முன்னின்று காக்கும். திங்கள், புதன் சுபமாகும்.

**5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$**

சிம்மராசி 9 பாதங்களும் கிரகஸ்தசுகத்தை விசேஷமாய் உண்டுபண்ணும். வெகுதூரத்திலிருந்து ஸ்நேகிதர்களால் விசேஷ நன்மை உண்டாகும், தொழில் ஓங்கும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். விவாஹாதி சுபங்களைத் தரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

**6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$**

கன்னியாராசி 9 பாதங்களும் தெய்வபலத்தோடு பிரகாசிக்கச் செய்யும். தனதான்ய விருத்தியையும், மகாதானுதி புண்ணிய பலன்களையும் உண்டுபண்ணும். எங்கும் நிறைந்த கீர்த்தியைத் தரும். ஆரோக்யத்தையும், நூதன பிரதிஷ்டா பலன்களையும் தரும். நூதனமான ராஜாங்க சம்பந்தமான மித்திராளையும், மேலோர் பெரியோர்களின் அன்பையும் தந்து இஷ்டசித்தியையும் தரும். திங்கள், புதன் சுபமாகும்.

**7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.**

துலாராசி 9 பாதங்களும் விசேஷ லாபத்தை உண்டு பண்ணும் தொழில் ஓங்கும்; அடிக்கடி சஞ்சார பலன்களையும் தந்து விசேஷ சுகத்தையும் உண்டுபண்ணும். எங்கும் விசேஷமான கீர்த்தி எற்படச்செய்யும். வெள்ளி, சனி சுபமாகும்.

**8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.**

விசாகம் 4-ம் பாதமும், அனுஷம் நான்கு பாதங்களும் மிச்ர பலனைத் தரும். வரவுக்கு மிஞ்சின செலவு ஏற்படச்செய்யும் இல்லற வாழ்க்கையில் சிரமம் காட்டும். கேட்டை நான்கு பாதங்களும் குடும்ப சுகத்தைத் தந்து ஆரோக்யமும் தரும். பந்து மித்ராள் மூலமாய் நன்மையைத்தரும். சனி, செவ்வாய் சுபமாகும்.

**9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$**

தனுர்ராசி 9 பாதங்களும் கிரஹசுகத்தையும், புத்திராதிகள் மூலமாய் விசேஷ கௌரவத்தையும், தனதான்ய விருத்தியையும் தரும். வாழ்க்கைத்தரம் உயரும். நஷ்டமானபொருள் தானுக வந்து சேரும். ராஜாங்க மூலமாய் அநேக நன்மைகளையும் உண்டுபண்ணும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம்**

மகரராசி 9 பாதங்களும் சுபமேயாகும். ஆரோக்யம் தரும். உத்தியோக உயர்வும், அன்பளிப்பும் தரும். உலக பிரசித்தி ஏற்படச்செய்யும். நல்ல உத்தம சிநேகிதர்கள் மூலமாய் எதிர்பாராத நன்மைகளை உண்டுபண்ணும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**11. கும்பம் - அவிட்டம் $\frac{1}{2}$. சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$.**

கும்பராசி 9 பாதங்களும் சுபமேயாகும். வாழ்க்கைத்தரம் உயரச்செய்யும் நூதன வஸ்திராபரணச் சேர்க்கையும், புத்திராதிகளால் சந்தோஷமும் உண்டுபண்ணும். ஆரோக்யம் உண்டுபண்ணும். கிரஹத்தில் மங்கள காரியங்கள் நடக்கும். திங்கள் புதன் சுபமாகும்.

**12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$ உத்திரட்டாதி - ரேவதி.**

மீனராசி 9 பாதங்களும் உயர் பதவிகளைத் தந்து நன்மதிப்பு ஏற்படச்செய்யும். தொழில் ஓங்கும்; நினைத்த காரியங்கள் சுலபசாத்யமாகும். நஷ்டமான பொருள் தானுக வந்துசேரும். சகல தொல்லைகளும் நீங்கி மனம் சந்தோஷம் அடையும். சனி, வியாழன் சுபமாகும்

குறிப்பு :- மேற்படி மாதத்தில் சிம்மராசியில் அங்காரகன் வக்ரித்தும், ஸ்தம்பகதியை அடைந்தும், சனி சூரியாளுக்கு கும்பத்திலிருந்தும், 7 லும் சமசப்தமதிருஷ்டியோடும் இருந்து கொண்டும் கும்பராசியில் ரவிசங்கிரமணம் பகலில் இரண்டாவது ஜாமத்திலும் ஏற்படுவதானது தக்ஷிணபாரதம் தவிர மற்ற தேசங்களில் அனேகவிதமான மாறுதல்களையும் இயற்கைக் கோளாறுகளையும் தரும். ஆங்காங்கு வசிக்கும் ஜனங்களுக்கு பயத்தையும் உண்டுபண்ணும். இதைப்படிக்கும் நண்பர்களும் பெரியோர்களும், மகான்களும், ஏற்கனவே கார்த்திகை மாத சஞ்சிகையில் எழுதியிருந்தபடி உலக க்ஷேமத்தின் பொருட்டு அந்தந்த சத்காரியங்களை ஆங்காங்கு நடத்திக்கொண்டு வந்தால் மேலே எதிர்காலம் பயம் நீங்கி எல்லோருக்கும் சுகவாழ்வைத் தரும். ராஜாங்கமும் நன்மை அடையும். கடவுள் காப்பார்.

சுபம்.

உ

குருபாதம்

# தருமையாதீனம் திருஞானசம்பந்தர் ஆலயம்

## திருநெல்வேலி சந்திப்பு.

### ஞாயிறுதோறும் சொற்பொழிவு மாலை 6-30 மணி

14—2—65 கண்ணப்பநாயனார்

— திரு. வ. ச. நடராசபிள்ளை

ஸ்ரீகாசி துண்டிராஜகணபதி திருவருட்பா

— திரு. ம. சிவசம்பு

21—2—65 எறிபத்தநாயனார்

— திரு. வ. ச. நடராசபிள்ளை

ஸ்ரீகாசி விசுவநாதர் திருவருட்பா

— திரு. ம. சிவசம்பு

28—2—65 காரிநாயனார்

— திரு. வ. ச. நடராசபிள்ளை

சிவராத்திரி

— திரு. ம. சிவசம்பு

7—3—65 கோச்செங்கட் சோழர்

— திரு. வ. ச. நடராசபிள்ளை

கேதாரநாதர் திருவருட்பா

— திரு. ம. சிவசம்பு

நெல்லை அருணகிரி இசைக் கழகம்,

இராம. கனகசபாபதி,

அமைச்சர்.

---

## தைச்செவ்வாய்த் திருவிழா

வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்குத் தைச்செவ்வாய்த் திருவிழா 31—1—65 ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கி 9—2—65 ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கி 9—2—65 செவ்வாய்க்கிழமை முடிய உள்ள நாட்களில் மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. 8—2—65 அன்று திருத்தேர்ப் பெருவிழாவும், 9—2—65 செவ்வாய்க்கிழமையன்று சித்தாமிர்த தீர்த்தத்தில் தீர்த்தப்பெருவிழாவும் நிகழ்ந்தன. அன்பர்கள் பலர் வந்து கண்டு மகிழ்ந்து உய்ந்தனர். இவ்விழாவையொட்டி நாள்தோறும் மாலையில், சமயச் சொற்பொழிவுகளும், இன்னிசை, கதாகாலக்ஷேபம் முதலிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

The following particulars regarding the ownership of the GNANASAMBANDAM the Monthly newspaper, are published as called for by Rule 8 of the Registration of News papers (Central Rules, 1956).

Form IV

1. Place of publication - DHARMAPURAM
2. Periodicity of its publication - MONTHLY
3. Printer's and Publisher's Name - Sri. K SUNDARESA IYER
   Nationality - INDIAN
   Address - VELLALAR DOUBLE ST., MAYURAM
4. Editor's Name - Vidwan Srimath- SOMASUNDARATHAMBIRAN SWAMIGAL
   Nationality - INDIAN
   Address - 41, USMAN ROAD, T. NAGAR, MADRAS - 17
5. Names & addresses of individuals who own the Newspaper and partners or Share holders holding more than one percent of the total Capital — His Holiness Sri-la-Sri Kailai SUBRAMANIA DESIKA GNANASAMBANDA PARAMACHARYA SWAMIGAL Avl. Tharmapuram Adhinam, Dharmapuram, Mayuram P. O. Tanjore Dt.

I, K. Sundaresa Iyer hereby declare that the particulars given above are true to the best of my knowledge & belief.

(Sd.) K. SUNDARESA IYER,
Publisher.

Dated 4-2-1965.

Printed & Published by K. Sundaresa Iyer. Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam press, Dharmapuram (Mayuram) 10-2-65